பக்கங்கள்: 16 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir


விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 22 ஞாயிற்றுக்கிழமை 07.03.2021 கதிர் 122

இது ரகசியம் அல்ல!

'கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான்' – என்பார்கள். நம் போன்ற ஊடகத்தாரும் பல சமயங்களில் இப்படிக் கேள்விச் செவியராகி விடுவதுண்டு. அதனால் ஊரைக் குழப்பியடித்து விடுவதும் உண்டு. அப்படி ஒரு சம்பவம் குறித்து பக்கம்02

## ஐ.நா. பிரேரணை நகலை ஏற்றது சம்பந்தன் தரப்பு!

### இருக்கும் வடிவத்தில் அப்படியே நிறைவேற்ற அங்கத்துவ நாடுகளைக் கோருகின்றது அது



ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராகப் பிரதான நாடுகள் தற்போது முன்வைத்துள்ள – பிரேரித்துள்ள – 46/01 இலக்கப் பிரேரணை வெற்றி பெற அங்கத்துவ நாடுகள் ஆதரவளிக்க வேண்டும் என்று இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது.

இது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் வெளியிட்டுள்ள 2

## சம்பந்தனின் நிலைப்பாட்டை அங்கீகரிக்க ரெலோ மறுப்பு!

### பிரேரணையை இப்போதைய அதன் வடிவத்தில் ஏற்க இயலாது என்று செல்வம், சுரேன் கருத்து



வவுனியா, மார்ச் 06

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிராக பிரதான நாடுகளினால் முன்வைக்கப்பட்டுள்ள 46/01 இலக்கப் பிரேரணையை அதன் தற்போதைய நகல் வடிவத்தில் ஏற்று அங்கீகரிக்குமாறு கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகளுக்கு தமிழ்த் தேசியக் 2

# ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரின் பெயரில் அரச அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல்



### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விசனம் ஜனாதிபதியிடம் எடுத்துச் செல்ல முடிவு

(ந.லோகதயாளன், எஸ்.தவசீலன்)

"யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அரச அதிகாரிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவரின் (அங்கஜன் இராமநாதனின்) பெயரால் மிரட்டல் விடுக்கப்படுவதாகவும், அழுத்தம் கொடுக்கப்படுவதாகவும் பல முறைப்பாடுகள் எனது கவனத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன. இதனை ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு செல்லவுள்ளேன்."

– இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா தெரிவித்தார். 2



# கடும்போக்கு சிங்களவரைத் திருப்திப்படுத்தவே ஜனாஸா விவகாரத்தைப் பயன்படுத்தியது அரசு

### இரணைதீவில் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்கள் விவகாரம் இலங்கை அரசு பெரும்பான்மையின மக்களைத் திருப்திப்படுத்த செய்த ஒரு விடயமே தவிர விஞ்ஞான ரீதியான பிரச்சினை இல்லை.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

இரணைதீவில் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களையும், பங்குத் தந்தையர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களான 15



## ஈஸ்டர் தாக்குதலின் குற்றவாளிகளுக்கு எமது அரசு தண்டனை வழங்கியே தீரும்

### கோட்டா திட்டவட்ட அறிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய அனைவருக்கும் தண்டனை வழங்குவதற்கு தமது அரசு நீதியினூடாக நடவடிக்கை எடுக்கும் என்று ஜனாதிபதி கோட்டாபய 15



## மன்னாரில் ரயிலில் மோதி மரணித்தவர் உட்பட வடக்கில் 4 பேருக்குக் கொரோனா

(எஸ்.நிதர்ஷன்)


வடக்கு மாகாணத்தில் மேலும் 4 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

மன்னாரில் நேற்று ரயிலுடன் மோதி உயிரிழந்தவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று 15

# நேற்று 7 ஜனாஸாக்கள் நல்லடக்கம்!

### இரு நாள்களில் 16 அடக்கம்



கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்யும், சுகாதார நடைமுறையின் கீழ், இரண்டாவது நாளான நேற்று 7 ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டன.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மஜ்மா நகரில், கொரோனா வைரஸ் தொற்று மூலம் மரணித்தவர்களின் உடல்களை 15

## மேலும் நால்வர் சாவு; கொரோனா காவு 497

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 497 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் 4 பேரின் மரணம் உறுதியாகிய நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

தொடங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 83 வயதான 15

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெளிவுபடுத்துவது நல்லது என்று எண்ணுகிறேன்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் ஒரு தொகுதியினரை அவர்களது கட்சி அதன் அங்கத்துவத்திலிருந்து வெளியேற்றி விட்டது என்றும் –

அதன் காரணமாக அவர்கள் பதவி இழந்து விட்டமையால், யாழ்.மாநகர மேயர் வி.மணிவண்ணனின் பதவி கேள்விக்குள்ளாகி விட்டது என்றும் –

செய்திகள் பரவின. உண்மையில் கேள்விச் செவியன் பாணி செய்தியினால் வந்த குழப்பம் இது. அதனால் விடயம் என்னவென்பதை வாசர்களுக்கு தெளிவுபடுத்துவது நல்லது என்று எண்ணுகிறேன்.

யாழ்.மாநகர சபைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் தெரிவு செய்யப்பட்டவர்கள் வி.மணிவண்ணன், பார்த்தீபன் உட்பட 13 பேர். கட்சித் தலைமையுடன் ஒரு பகுதியினருக்கு முறுகலும் முரண்பாடும் ஏற்பட்டமை தெரிந்ததுதான்.

மணிவண்ணன் உட்பட பத்துப் பேர் ஓரணியில். கட்சித் தலைமையுடன் ஆக மூன்று பேர் மட்டுமே.

இந்த நிலையில் மணிவண்ணன் உட்பட யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் நால்வர், சாவகச்சேரி பிரதேச சபையில் கட்சி சார்பில் அங்கம் வகிக்கும் இருவர் என மொத்தம் ஆறு உள்ளூராட்சி சபை உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து நீக்கும் நடவடிக்கையை சில மாதங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (அல்லது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்) எடுத்தது. அந்த முடிவை யாழ். மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் கட்சி நிர்வாகம் அறிவித்தது.

அந்த அறிவித்தல் கட்சியிலிருந்து தமக்குக் கிடைக்கப் பெற்றிருக்கின்றமை பற்றிய தகவலை சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு எழுத்தில் அறிவித்த உதவித் தெரிவத்தாட்சி அலுவலர், அதனடிப்படையில் அடுத்த மூன்று வார காலத்தில் (இருபத்தியொரு நாள்களில்) அந்தப் பிரமுகர்களின் உள்ளூராட்சி சபை உறுப்பினர் பதவி வறிதாகியதாகத் தாம் அறிவிப்பார் என அந்தந்த உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தினார்.

எனினும் அவர்கள் அறுவரும் (யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் நால்வர் + சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் இருவர்) கட்சியிலிருந்து தங்களை வெளியேற்றும் கட்சித் தலைமையின் முடிவுக்கு எதிராக யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். அந்த வழக்கை விசாரணைக்கு ஏற்ற மாவட்ட நீதிமன்றம், சம்பந்தப்பட்ட உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து வெறியேற்றும் முடிவுக்கு எதிராக இடைக்காலத் தடை விதித்தது. அதனால் அவர்கள் தொடர்ந்து உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாகச் செயற்படுகின்றனர்.

இதற்கிடையில், யாழ்.மாவட்ட நீதிமன்றத்தின் அந்த இடைக்காலத் தடை உத்தரவுக்கு எதிராகக் கட்சி, மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மேன்முறையீடு செய்தது. அந்த மேன்முறையீடு இரண்டு தடவைகள் விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையில் அவற்றின் ஒன்றின் மீது வரும் 24ஆம் திகதி இடைக்கால உத்தரவு ஒன்று விடுக்கப்படும் எனத் தெரிகின்றது.

மேற்படி உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து நீக்குவதற்கு எதிராக யாழ்.மாவட்ட நீதிமன்றம் விடுத்த இடைக்காலத்தடையை மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றம் அங்கீகரித்து அனுமதித்தால் மாவட்ட நீதிமன்ற வழக்கு விசாரணை முடிந்து ஒரு தீர்ப்பு வரும்வரை சம்பந்தப்பட்ட உறுப்பினர் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாகத் தொடர்ந்து நீடிக்க முடியும்.

மாறாக, அந்த இடைக்காலத் தடை உத்தரவை மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றம் விலக்க அல்லது ரத்துச் செய்யப் பணித்தால் சம்பந்தப்பட்ட உறுப்பினர் தமது உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் பதவியைத் தற்காலிகமாகவேனும் இழக்க வேண்டிநேரும். அவர் உடனடியாக உயர்நீதிமன்றத்தை நாடி மீண்டும் மேன்முறையீடு செய்துதான் தமது உறுப்பினர் பதவியைத் தக்க வைக்க எத்தனிக்கலாம்.

இதுதான், யாழ்.மாநகர சபை மேயர் வி.மணிவண்ணன் உட்பட யாழ் மாநகர சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் நால்வர் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் இருவரின் நிலைமை.

இதன் பிறகு கட்சியின் தலைமைக்குக் கட்டுப்பட மறுக்கும் யாழ்.மாநகர சபையின் எஞ்சிய ஆறு உறுப்பினர்களையும் கட்சியிலிருந்து வெளியேற்றும் கடிதத்தைக் கடந்த வாரம் யாழ்.உதவித் தெரிவத்தாட்சி அலுவலகருக்கு கட்சி அனுப்பி வைத்துள்ளது. அவ்வளவுதான் நடந்தது.

இந்தக் கடிதம் கிடைத்திருப்பதால் அந்த அறுவரும் யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் பதவியை இழந்தனர் என அடுத்த மூன்றுவாரகாலத்துக்குள் அறிவிக்கப்படும் என்பதை உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் அந்த அறுவருக்கும் எழுத்தில் தெரிவித்துள்ளார்.

அந்த மூன்று வார காலத்துக்குள் கட்சியின் இந்த முடிவுக்கு எதிராக யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் தனித்தனியாக வழக்குத் தாக்கல் செய்து அதற்கான தடை உத்தரவுகளை சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் பெறவேண்டும்; பெறுவார்கள்.

அதற்கிடையில், அந்த உறுப்பினர்களின் உள்ளூராட்சி உறுப்பினர் பதவி உடனடியாகப் பறிபோய்விடும் என்று அஞ்சுவதற்கு ஏதுமில்லை.

அப்படி இருக்கையில், அந்த உறுப்பினர்களின் உள்ளூராட்சி உறுப்பினர் பதவி இதோ அவசரமாகப் பறிபோகின்றது என்ற மாதிரி செய்தியை முன்தள்ளுவது அர்த்தமற்றது.

இன்றைய நிலையில் –

மேயர் மணிவண்ணன் உட்பட நான்கு யாழ்.மாநகர சபை உறுப்பினர்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து வெளியேற்றும் முடிவுக்கு எதிராக யாழ்.மாவட்ட நீதிமன்றம் விடுத்திருக்கும் இடைக்காலத் தடை உத்தரவு தொடர்பில் வரும் 24ஆம் திகதி மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏதேனும் அதிரடி உத்தரவு பிறப்பித்தாலன்றி நிலைமையில் மாற்றம் ஏதும் உடனடியாக ஏற்படாது என்பதுதான் நிஜம்

– மின்னல் –

## ஒருங்கிணைப்புக் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நல்லூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சௌபாக்கியா வாரத்தை அங்குரார்ப்பணம் செய்து பயனாளிகளுக்கு உதவித்திட்ட காசோலைகளை வழங்கி வைக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிகாரிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரின் பெயரால் அவரின் இணைப்பாளர்கள் எனப்படுவோர் மிரட்டல் விடுக்கின்றனர் எனவும், அழுத்தம் கொடுக்கின்றனர் எனவும் பல முறைப்பாடுகள் எனது கவனத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன.

அவ்வாறான அநாகரீகமான செயற்பாடுகள் குறித்த ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவருக்கு தெரிந்து நடக்கின்றதா, தெரியாமல் நடக்கின்றதா என்பது தொடர்பாக அவருடன் கலந்துரையாடவுள்ளேன். அவருக்குத் தெரியாமல் நடக்குமாக இருந்தால், இவ்வாறான அநாகரிகமான செயலை அவர் கட்டுப்படுத்த வேண்டும்.

மாறாக, அவருக்குத் தெரிந்துதான் அரச அதிகாரிகளுக்கான மிரட்டலும், அழுத்தங்களும் அவரது இணைப்பாளர்களால் விடுக்கப்படுமானால் அது தொடர்பில் ஜனாதிபதியுடனும், பிரதமருடனும் பேசி முடிவொன்றைக் காண்பேன்.

யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல கிளிநொச்சி அதிகாரிகளிடமும் அழுத்தங்கள் பிரயோகித்திருக்கின்றனர். எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுமாறு ஆலோசனை கூறியிருக்கின்றார்கள். ஆனால், சிரேஷ்ட அதிகாரியான கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் யாருடைய ஆலோசனையையும் கேட்கும் அவசியம் தனக்கு இல்லை என்று தகுந்த பதில் அளித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மக்களால் தொடர்ச்சியாகத் தெரிவு செய்யப்பட்டு சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பிராகவும், சிரேஷ்ட அமைச்சராகவும் இருக்கின்ற என்னை இந்த மக்களிடம் இருந்து சண்டித்தனத்தால் பிரித்துவிட முடியாது.

நான் தூரத்தே இருந்து வேடிக்கை பார்த்துவிட்டு –அதாவது ஒரு பொம்மையாக இருந்துவிட்டு – அரசியலுக்குள் வரவில்லை. பல நெருப்பாறுகளைக் கடந்தே தமிழ் மக்களின் அரசியலுக்குள் வந்தவன்.

சமுர்த்தி திட்டத்தை யாழ்ப்பாணத்திற்கு ஒரு நெருக்கடியான சூழலில் நானே கொண்டுவந்தேன். சமுர்த்தி செயற்பாடுகளுக்கும் அரசியல் தலைமைகளுக்கும் தொடர்புகள் இருக்கலாம். ஆனால் எவரும் தமது சுயநலன்களுக்காக இந்த வேலைத்திட்டத்தை நடத்த முற்படக்கூடாது – என்றார்.

அரசியல் தலைமைகளின் தவறான தீர்மானங்களினால் சொல்லொணாத் துன்பங்களையும் கணக்கெடுக்க முடியாத இழப்புகளையும் மக்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதாக தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தற்போது கிடைத்திருக்கின்ற வாய்ப்புக்களை பயன்படுத்தி மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்பத்தான் முயற்சிக்கிறார் எனவும், யதார்த்தத்தினை புரிந்து கொண்டு மக்கள் சரியான தெரிவுகளை மேற்கொண்டு பயனடைந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி மற்றும் பூநகரி ஆகிய பிரதேச செயலகங்களிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் நேற்று சௌபாக்கிய வாரம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சம்பந்தனின் நிலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டமைப்பின் சார்பில், அதன் தலைவர் இரா.சம்பந்தன் விடுத்த கோரிக்கையுடன் தாங்கள் உடன்படவில்லை என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ தெரிவித்துள்ளது.

ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பியும், அக்கட்சியின் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமியும் இந்தத் தகவலை நேற்றிரவு 'காலைக்கதிர்' நாளிதழுக்குத் தெரிவித்தனர்.

சம்பந்தனின் கருத்து கூட்டமைப்பின் நிலைப்பாடாக நேற்று வெளியிடப்பட்டது. அது தொடர்பான அறிக்கையில் சம்பந்தன் ஒப்பமிட்டிருந்தார். இலங்கைத் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா, ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன் ஆகியோரும் அதில ஒப்பமிட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த 23, 24ஆம் திகதிகளில் ஜெனிவா அமர்வை ஒட்டி இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா ஆற்றிய உரைக்குப் பதிலளித்து வெளியிடப்படுவதாக இந்த அறிக்கை அமைந்தது. அதில் இப்போது ஜெனிவாவில் பிரேரிக்கப்பட்டுள்ள – இலங்கை தொடர்பான – பிரேரணையை ஆதரிக்குமாறு கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகளைக் கோரப்பட்டிருந்தது.

இந்த நிலைப்பாட்டையே ரெலோ தலைவர்கள் ஏற்க மறுத்துள்ளனர். அந்த நிலைப்பாடு தங்களின் இசைவு அல்லது இணக்கத்துடன் வெளியிடப்பட்டதல்ல என்று செல்வமும் சுரேனும் தெரிவித்தனர். அவர்கள் மேலும் கூறியவை வருமாறு:

ஜெனிவா அமர்வை ஒட்டி தமிழ்த் தேசியத் தரப்புகளில் மூன்று பிரதான கூட்டுக்களின் தலைவர்களும் (சம்பந்தன், விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர்) ஒப்பமிட்டு கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகளுக்குக் கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தனர். அதுவே தமிழர் தரப்பின் ஐக்கிய நிலைப்பாடாக வெளிப்படுத்தப்பட்டது.

அதில் தமிழர் தரப்புகள் கோரியுள்ள முக்கிய விடயங்கள் ஏதும் இப்போது பிரேரிக்கப்பட்டுள்ள நகல் வரைவில் இல்லை. அப்படி இருக்கையில் அதனை நிறைவேற்றுமாறு அங்கத்துவ நாடுகளை நாம் எப்படிக் கோர முடியும்? அத்தகைய கோரிக்கையுடன் நாம் இணங்க மாட்டோம்.

சம்பந்தன் ஐயா ஓர் அறிக்கை வெளியிட வேண்டும் என்று கூறினார். அதைப் பார்த்துக் கருத்துக் கூறுமாறு கேட்டார். ஆனால் அந்த அறிக்கை எனது பார்வைக்கு வர முன்னரே – நாம் பரிசீலித்துக் கருத்து கூற முன்பே – ஒட்டு மொத்தக் கூட்டமைப்பின் அறிக்கையாக அது வெளியிடப்பட்டு விட்டது.

அதை நாம் ஏற்க முடியாது. இலங்கை விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தக் கோருவது உட்பட நான்கு பிரதான கோரிக்கைகளை நாம் ஏற்கனவே ஒன்றுபட்ட வேண்டுகோளாக அங்கத்துவ நாடுகளிடம் வைத்துள்ளோம். அவற்றின் அடிப்படைகள் கூட இல்லாத ஒரு நகல் பிரேரணையை அங்கீகரிக்குமாறு அங்கத்துவ நாடுகளை நாம் கோருவது – அல்லது அத்தகைய கோரிக்கையுடன் நாம் உடன்பட்டுப் போவது – முறையான செயல் அல்ல. தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை பிரதிபலிக்கும் நடவடிக்கையாகவும் அது இருக்க மாட்டாது. எனவே சம்பந்தன் சார்பில் கூட்டமைப்பின் பெயரில் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையுடன் நாம் உடன்படவில்லை என்பதை எமது மக்களுக்குத் தெளிவுபடுத்துகிறோம். இது தொடர்பில் எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் விவரமான அறிக்கை உடனடியாக வெளியாகும். – என்றார்.

## ஐ.நா. பிரேரணை நகலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன் ஆகியோரின் பெயரில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 23, 24 ஆம் திகதிகளில் ஜெனிவா அமர்வையொட்டி இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆற்றிய உரைக்குப் பதிலளித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயங்களை சம்பந்தன் உட்பட கூட்டமைப்புத் தலைவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த விடயத்தையொட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட சில அம்சங்கள் வருமாறு:–

★ ஏற்கனவே இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட 30/01, 34/01, 40/01 தீர்மானங்களில் இருந்து வெளியேறுவதான இலங்கையின் அறிவிப்பு அர்த்தமற்றது. அத்தகைய பொறுப்பிலிருந்து இலங்கை வெளியேற முடியாது.

★ ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான இப்போதைய அறிக்கையை நிராகரிக்கின்றார் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் கூறுவது அர்த்தமற்றது. இந்த அறிக்கை பெரும்பாலான அங்கத்துவ நாடுகளால் வரவேற்கப்பட்டுள்ளது.

★ உலக நாடுகளில் மனித உரிமை நிலைவரத்தை ஆராய்ந்து வெளிப்படுத்துவது மனித உரிமைகள் ஆணையாளரின் சட்டபூர்வமான செயற்கடமை. அந்தச் சட்டபூர்வச் செயற்பாடு நாட்டின் இறைமையையோ, ஆள்புல ஒருமைப்பாட்டையோ மீறும் நடவடிக்கை அல்ல.

★ 2015 மார்ச்சில் இலங்கை தொடர்பாக நிறைவேறப்பட்ட 30/01 இலக்கத் தீர்மானத்தை இலங்கையும் சேர்த்து ஆதரித்து அனுசரணை வழங்கியமையை, 2019 இன் ஈஸ்டர் ஞாயிறுக் குண்டுத் தாக்குதலுடன் இலங்கை அரசு இப்போது தொடர்புபடுத்தி, நம்ப முடியாத இட்டுக்கட்டும் கதைகளை அவிழ்த்து விடுகின்றது.

★ எனினும், போரின் இறுதிக் கட்டத்தில் பல பத்தாயிரம் தமிழர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் விளக்கம் ஏதும் கூறுகின்றார் இல்லை.

★ இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் நடந்த உண்மைகளைக் கண்டறிந்து, நீதியை நிலைநாட்ட இலங்கை எந்த உருப்படியான நடவடிக்கையையும் எடுக்கவேயில்லை.

★ புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக 2016இல் நாடாளுமன்றத்தில் ஏகமனதாக எட்டப்பட்ட தீர்மானத்தை முன்னெடுக்க இலங்கை ஆக்கபூர்வமாகச் செயற் படவில்லை. அதற்கு எதிரான போக்கே இப்போது முன்னெடுக்கப்படுகின்றது.

★ 1971 மற்றும் 1988/89 இல் தென்னிலங்கையில் பல பத்தாயிரம் இளைஞர்கள் சட்ட விரோதமான முறையில் கொன்றொழிக்கப்பட்டனர். அப்போதும் மனித உரிமைகள் மோசமாக மீறப்பட்டன. அவை எவற்றுக்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேயில்லை.

– இவ்வாறு கூட்டமைப்பு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

# தமிழ் இனம் இல்லாமல் அழிந்து போகின்ற போது எமது மக்கள் எப்படி அபிவிருத்தியை அனுபவிப்பது?

## கல்முனை மாநகரசபை உறுப்பினர் இராஜன் கேள்வி



இந்த நாட்டிலே தமிழ் இனம் என்ற ஒன்று இல்லாமல் போகின்ற போது எமது மக்கள் எப்படி அபிவிருத்தியை அனுபவிப்பது என்பது பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும் என கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் இராஜன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்று வரும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தின் இரண்டாம் நாளான கடந்த வியாழக் கிழமை இரவு வருகை தந்து தமது ஆதரவை வழங்கிய போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

மட்டக்களப்பில் இடம்பெற்றுவரும் உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு எங்கள் ஆதரவை நல்கும் பொருட்டு நாங்கள் அம்பாறை மாவட்டத்தில் இருந்து வருகை தந்திருக்கின்றோம்.

எமது இனத்தின் விடுதலைக்காக நாங்கள் ஒற்றுமையாக இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் எந்த இனத்தையோ, மதத்தையோ சாடவில்லை, எந்த நாட்டையும் நாங்கள் கேட்கவில்லை. எங்கள் மக்களின் விடிவு, எமது மக்கள் நிரந்தரமாக, சந்தோசமாக இந்த நாட்டின் ஒரு பிரஜையாக வாழ்வதற்கான தீர்வையே நாங்கள் கேட்டு நிற்கின்றோம்.

இன்று இந்த நாட்டிலே காணி ஆக்கிரமிப்பு, ஆலயங்களை உடைத்து புத்த பெருமானை நிறுவுதல், மேய்ச்சற்தரைக் காணிகளை அபகரித்தல் போன்ற விடயங்களெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான விடயங்களை நிறுத்துங்கள் இந்த நாட்டில் நாங்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்று தான் போராடினோம். எமது ஆயுதப் போராட்டமும் இதனை நோக்காகக் கொண்டே ஆரம்பிக்கப்பட்டது.

ஆயுதப் போராட்டம் மௌனித்த பின்பு கூட எமது மக்கள் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு ஆசைப்பட்டு தற்போது எமது மக்கள் கணிசமான வாக்களித்து சிங்கள அரசு சார்ந்த பிரதிநிதிகளைக் கூடத் தெரிவு செய்திருக்கின்றார்கள். அவ்வாறு எமது மக்கள் தெரிவு செய்திருந்தாலும், அதன் மூலம் எந்தவிதமான விடிவும் இல்லாமலேயே எமது மக்கள் ஏங்கித் தவிக்கின்றார்கள்.

எமது நாட்டிலே வாழும் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் நீதியாகக் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்திலே இன்று லண்டனிலே தனது உயிரைத் துச்சமாக நினைத்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் இருக்கின்ற அந்த அம்மையாரை நினைத்து நாங்கள் பெருமை அடைகின்றோம். எங்கள் திலீபன் அண்ணன், அன்னை பூபதியம்மா வரிசையிலே இன்று அவர் அந்தப் போராட்டத்தை அனுஷ்டித்துக் கொண்டிருக்கின்றார்.

எமது இனத்தின் விடிவுக்காக நாங்கள் எவ்வாறெல்லாம் போராட்டங்களை நடத்த முடியுமோ அவ்வாறெல்லாம் போராடிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இந்தப் போராட்டங்களையெல்லாம் இந்த நாட்டிலே வாழுகின்ற எம்மினத்தைச் சார்ந்த ஒருசிலரே கொச்சைப் படுத்திப் பேசுவதென்பது மிகவும் மனவேதனையாக இருக்கின்றது. நீங்கள் அபிவிருத்தியைச் செய்வதற்கு வந்திருக்கலாம். நீங்கள் அந்த அபிவிருத்தியைச் செய்யுங்கள்.

உங்கள் அபிவிருத்தி எமது மக்களுக்குச் சரியான முறையில் வந்து சேர வேண்டும். அந்த அபிவிருத்தியை எமது மக்கள் அனுபவிப்பதற்கு இந்த நாட்டிலே அவர்கள் நிம்மதியாக வாழ வேண்டும். அவர்கள் இந்த இடத்திலே இருப்பதற்கான இருப்புத் தக்க வைக்கப்படல் வேண்டும். மக்களுக்கான சொந்த இருப்பு இல்லா பட்சத்தில் எந்த வீதியோ, கட்டடமோ, வீடுகளையோ அனுபவிக்க முடியாது. இந்த நாட்டிலே தமிழினம் என்ற ஒன்று இல்லாமல் போகின்ற போது எமது மக்கள் எப்படி அபிவிருத்தியை அனுபவிப்பது என்பது பற்றி அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாங்கள் எவரையும் குறைகூறவில்லை.

நீங்கள் அபிவிருத்தியை நோக்கி நிற்பவர்கள் அங்கேயே நில்லுங்கள். நாங்கள் எமது மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். எங்களை நீங்கள் விமர்சனம் செய்வதை நிறுத்தி சரியான முறையில் அபிவிருத்தியை மேற்கொள்வதைப் பாருங்கள். எமது போராட்டங்கள் வெற்றியளிக்கும் வரையில் நாங்கள் எமது மக்களுக்காகப் போராடிக் கொண்டேயிருப்போம். எனவே, இந்த அரசாங்கம் ஒன்றை நினைக்க வேண்டும். இது சிங்கள மக்களுக்கு எதிரான போராட்டம் அல்ல. இது எமது உரிமைக்கான அஹிம்சை வழிப் போராட்டம். இது எமது இனத்தின் விடிவுக்கான போராட்டமே தவிர எவருக்கும் எதிரான போராட்டமல்ல. – என்று தெரிவித்தார்.

# முதலாவது கொரோனா தொற்றாளரிடம் மீள குருதி மாதிரி சேகரித்து சோதனை!

கொரோனாவின் பிடியில் சிக்கிய முதலாவது இலங்கையரிடம் இருந்து ஒரு வருடத்திற்கு பின்னர் மீண்டும் குருதி மாதிரி பெறப்பட்டுள்ளது. கடந்த வருடம் மார்ச் 11ஆம் திகதி மத்தே கொடையைச் சேர்ந்த சுற்றுலா வழிகாட்டி ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளான முதல் இலங்கையராக அடையாளம் காணப்பட்டார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழ கத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின்போது அவர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டார்.

தொற்றுக்குள்ளான நபர் குணமடைந்துள்ள போதிலும் அவரது உடலில் காணப்படும் நோய் எதிர்பு சக்தியை பரிசோதனை செய்வதற்காக மீண்டும் அவரிடம் இருந்து குருதி மாதிரி பெறப்பட்டது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வு பிரிவு ஒன்றால் இந்த மாதிரி பெறப்பட்டுள்ளது.

# வெளிநாட்டுக்கு பணிப்பெண்கனை அனுப்பல்; பல மில்லியன் ரூபாக்களை பெறும் முகவர்கள்

மத்திய கிழக்கு மற்றும் சில நாடுகளுக்கு தேவையான வீட்டுப் பணிப்பெண்களை வழங்குவதற்காக, தலா 10 லட்சம் ரூபா தரகு கட்டணத்தை முதலாளிகளிடம் இருந்து தரகர்கள் பெறுகின்றமை தொழிலாளர் அமைச்சில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது.

அந்நிய செலாவணி தொடர்பான பணிக்குழுவின் அதிகாரிகளுடன் சிறப்பு கலந்துரையாடலில் தொழிலாளர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அண்மையில் ஈடுபட்டார்.

இதன்போது இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறியுள்ளவை வருமாறு – வீட்டுப் பணிப்பெண் ஒருவருக்கு 10 லட்சம் ரூபா தரகு பணத்தை முகவர்கள் பெறுகின்றனர்.

குறித்த முறையின் வாயிலாக தரகர்கள், அந்நிய செலாவணியில் பல்லாயிரக்கணக்கான ரூபாவைச் சம்பாதித்துள்ளனர். ஆனால் அந்த பணத்துக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக ஆராய வேண்டும்.

மேலும் உள்ளூர் வங்கிகள் ஊடாக இலங்கைக்கு பணம் சட்டப்பூர்வமாக வருகிறதா என்பதை அறிய நிதி மற்றும் தொழில்நுட்ப தணிக்கை செய்ய வேண்டும்.

இதேவேளை ஒரு முகவர், மத்திய கிழக்கு மற்றும் சில நாடுகளுக்கு வீட்டுப் பணிப் பெண்களை வழங்குவதற்காக தலா 10 லட்சம் ரூபாவைப் பெறுகின்றார்.

குறித்த சம்பவம் தொடர்பாக ஒரு குரல் பதிவு கூட என்னிடம் இருக்கின்றது.

மேலும் ஒரு வீட்டுப் பணிப்பெண்ணை வழங்குவதற்காக முகவர்களுக்கு மத்திய கிழக்கு முதலாளிகள் செலுத்திய 10 லட்சம் ரூபாவில், 5 லட்சம் ரூபாவை வீட்டுப் பணிப் பெண் பெயரில் வைப்பிலிட வேண்டுமென்று சட்டம் இயற்றப்பட வேண்டும்.

முகவர்கள் பெறும் பணம் நாட்டுக்குள் வராதமையால் இந்த பணத்தை அந்நிய செலாவணியாக்குவது தொடர்பாக ஆராய வேண்டும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தவக்காலச் சிந்தனை

கலாபூஷணம் செ.யோசப்பாலா



## கட்டடங்களை அல்ல மனித மனங்களை கட்டியெழுப்புங்கள்.

இன்றைய அவசர உலகில் நேரமில்லை நேரமில்லை என்ற வார்த்தைகளே அதிகமாக பலர் உதடுகளிலும் ஒலிக்கிறது. 'ஆறு நாள்கள் நீ உழைத்து உன் அனைத்து வேலைகளையும் செய்வாய் ஏழாம் நாளோ உன் கடவுளாகிய ஆண்டவருக்கான ஓய்வு நாள். எனவே அன்று நீயும் உன் மகனும், மகளும் உன் அடிமையும், அடிமைப் பெண்ணும், உன் கால்நடைகளும் உன் நகருக்குள் இருக்கும் அந்நியனும் யாதொரு வேலையும் செய்ய வேண்டாம்' என இறை வாக்கு உரைக்கின்றது.

இதுவே உலகில் ஞாயிறு ஓய்வு நாளாக குடும்பத்தாருடன் இணைந்தும் ஓய்வுடன் ஆன்மீக வழிபாடுகளிலும், பொழுதுபோக்குகளிலும் ஓய்வெடுக்கும் தினமாக கொண்டாடி மகிழ கிடைத்த நாளாக்கி மகிழ்கிறார்கள். இவை ஒரு சிலரது வாழ்வில் கடைப்பிடிக்கத் தவறிவிடுகிறார்கள். இதற்குப் பணம் தேடும் பல நிறுவனங்களாலும், கல்வித் தேடல் அன்று தான் அதிகம் பெற்றுக் கொள்ள அனுப்பி வைக்கும் குடும்பங்களும், அதற்குத் துணை போகும் தனியார் நிறுவனங்களும் ஓய்வின்றி பேராசையுடன் இயங்கி ஓய்வு, குடும்ப உறவு ஆன்மீக தேடலுக்கு தடையாய் இருப்பதும் சிறுவர்கள் மத்தியில் இயந்திர மனிதத்தை உருவாக்குவதற்குக் காரணமாகிறது.

வழிகாட்டிகள் வழி தவறும் போது எதிரலை சந்ததியும் வழி மாறுவதற்கு காரணமாவதை உணர மறுக்கும் பெற்றோருக்கு கிடைக்கும் அறுவடைகள் தவறான வழியில் பிள்ளைகள் செல்வதை உணரத் தவறுவதால் தான் ஆன்மீக விழுமியங்கள் அற்ற சமூகத்தை அன்றாடம் காண்கிறோம்.

புத்தக, கணினி கற்பித்தல் வழிகள் மட்டும் ஒழுக்கமுள்ள, ஆன்மீக பண்புள்ள, நல்லாளுமை உள்ள சமூகத்தை கட்டி வளர்க்க முடியாமல் போவதற்கும் காரணமாகிறது.

இதனை உணர்த்தும் நற்செய்தியாக தரப்படுவது 'உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ்நாள்கள் நீடிக்கும்படி உன் தந்தையையும், தாயையும் மதித்து நட' என்ற செய்தியை வாழ்வில் அனுபவிக்க முடியாது. தவிக்கும் உறவுகள், தனது உழைப்பையும் உணவையும் எதிர்பார்க்கும் பிள்ளைகளாகவும், குடும்ப ஆன்மீக உறவை தொலைத்தவர்களாகவும் சமூக நல்லுறவற்ற பொதுப் பணிகளில் ஈடுபட சந்தர்ப்பங்களைத் தவற விட்டவர்களாகவும் சிறந்த ஆளுமை உள்ளவர்களாகவும் வளர்க்க முடியாதவர்களாகவும் உருவாகுவதற்கு வழிகாட்டிகளும் காரணமாகின்றார்கள்.

ஆன்மீக தேடல் இல்லாதவரிடத்தில் வன்முறை, சமூக சீர் இன்மைக்கு தூண்டப்படுவர்களை உருவாக்குவதில் வழிகாட்டிகளில் பங்காளிகள் என்பதனை உணர்ந்து செயல்பட வேண்டியது சமய, சமூக, குடும்ப தவத்தின் பயணமாக்க குடும்ப உறவிலும், சமூக உறவிலும் சமய விழுமியங்களைப் பகிர்வதிலும் முன்னின்று எமக்குத் தரப்பட்ட பொறுப்பான சந்தர்ப்பங்களை சாதகமாக்க இவற்றின் அழைப்பின் காலமாக்குங்கள்.

எந்தப் பிள்ளையும் நல்ல பிள்ளை தான் மண்ணில் பிறக்கையிலே அவர்கள் நல்லவாதாவதும் தீயவராவதும் சமூக வழிகாட்டலில் தான் என்பதினை தாம் வணங்கும் தெய்வங்களின் வழிபாட்டுடன் நின்று விடாது. குடும்ப உறவை வளர்ப்பதிலும் ஆன்மீக சிந்தனைகள் மூலம் பரிவு, அன்பு, மன்னிப்பு, சமூகப் பொறுப்புடையோரை மாற்றுவதற்கு பாடப் புத்தகங்களில் மட்டுமல்ல வாழ்வை நல்வழிப்படுத்தும் ஆன்மீக வழிகாட்டலும் இன்றைய காலத்தில் தேவை என்பதை உணர்ந்து செயற்பட முன்வாரீர்.

கட்டடங்களால் வளர்ந்து வருவது மட்டுமல்ல நல் மனிதப் பண்புகளால் வளர்க்கப்பட நல் ஒழுக்கம், போதனைகளால் மட்டுமல்லாது குடும்ப நல்லுறவு செயல்களுக்கு முன்னுரிமை அளிப்பதாலும் மாற்றலாம். என்பதனை இறை தேடல்கள் பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பமாக ஆலய தரிசனங்கள், ஆலய வழிபாடுகள், தவப் பயணங்களாக ஒறுத்தல், உபவாசங்கள், தான தர்மங்கள் பிள்ளைகள் ஈடுபடும் நிலைகண்டு மகிழும் காலமாக இத் தவக்கால புதிய பாதை புதிய பயணமாகத் தொட இத் தவத்தின் காலத்தை பயனுள்ளதாக்கி வாழ்வின் நல்வழிகாட்டியாக மனம் மாறுங்கள், நல்லொழுக்க சந்ததிகளாக மாற்றுங்கள்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மைத்திரி மீதான தூற்றுதல்கள்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதலை தடுத்து நிறுத்தத் தவறிய குற்றச்சாட்டுத் தொப்பி எதிர்பார்க்கப்பட்டபடி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலை மீது வீழ்ந்துள்ளது. அதனால் அவரும் அவரது கட்சியினரும் பதறியடிக்கின்றனர்.

இந்தக் குண்டுத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்துவதற்கு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைதான் இப்போது வெளிவந்திருக்கின்றது.

அவர் நியமித்த ஆணைக்குழுவே அவருக்கு எதிராக குற்ற விசாரணை நடத்துமாறு பரிந்துரைத்திருக்கின்றது. அதனை நிராகரித்திருக்கின்றார் மைத்திரிபால சிறிசேன.

*"இலங்கை அரசியலில் இருந்து என்னை ஓரங்கட்டும் வகையில் – பழி வாங்கும் வகையில் – திட்டமிட்டு என் மீது அநாவசியமான, பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. உண்மைத் தகவல்கள் அதில் மறைக்கப்பட்டுள்ளன."* – என்றெல்லாம் புலம்பியிருக்கின்றார் மைத்திரிபால சிறிசேன.

சரி, அவர் நியமித்த ஆணைக்குழுவே விஷமத்தனமாக அப்படி நடந்து கொண்டது என்றால், அதை அவ்வாறு நடக்கத் தூண்டியவர்கள் யார், தம்மை ஓரங்கட்டும் நடவடிக்கைகளை முன்னெடுப்பவர் எவர் என்ற விவரங்கள் எவற்றையுமே கோடிகாட்டாமல் பொத்தம் பொதுவில் குற்றச்சாட்டு விரலை நீட்ட எத்தனிக்கின்றார் மைத்திரிபால.

அப்படி யாரையும் சுட்டிக்காட்ட அவருக்கு துணிவில்லை அல்லது அப்படி யாருமே இல்லை என்பதுதான் உண்மையாகும்.

மைத்திரியார் மீது இப்போது சுமத்தப்படும் இந்தக் குற்றச்சாட்டுகளில் இருந்து அவரை விடுவிப்பதற்காக அவரின் சில, பல நல்ல பக்கங்களை முன்வைக்கின்றனர் மைத்திரி தரப்பினர்.

*"எந்தவொரு ஊடகவியலாளரை அல்லது எதிரியைக் கொல்லாத ஒரே இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாத்திரமே. அவர் எவரையும் காணாமலாக்கவோ அல்லது எந்த அமைப்புக்கும் தீ வைக்கவோ அல்லது தன்னைக் கேலி செய்த எவருக்கும் பதிலடி கொடுக்கவோ இல்லை."* – என்று ஒரு நீட்டுப் பட்டோலை படிக்கப்படுகின்றது.

அதில் குறிப்பிடப்படும் விடயங்கள் மறுக்கக் கூடியவை அல்ல. உண்மைதான். மைத்திரியை விதந்துரைத்துப் போற்றக் கூடிய அம்சங்கள்தான் அவை. தமக்கு முன்னும் பின்னும் இருந்த ஜனாதிபதிகள் போல சட்டத்தைத் தன் கையில் எடுத்து, எதேச்சதிகாரம் பண்ணியவர் அல்லர் அவர்.

இன்னும் சொல்லப் போனால் ஆறு ஆண்டுகள் பதவிக் காலத்துக்கு மக்கள் வாக்குகள் மூலம் தெரிவானவர். அதில் ஓராண்டைக் குறைத்து ஐந்து வருடங்களாக்குவதற்கு இணங்கி ஒத்துழைத்தவர். ஏனைய ஜனாதிபதிகள் போல (டி.பி. விஜேதுங்க மட்டும் சற்று விதிவிலக்கு) அவர் மூர்க்கமாக நடந்தவரும் அல்லர்.

ஆனால், இத்தகைய நடத்தைச் சிறப்புகள் – நற்சான்றிதழ்கள் – எல்லாம் பிறிதொரு குற்றத்திலிருந்து விடுதலை வாங்கித் தந்து விடா. மாறாக, அத்தகைய குற்றச்சாட்டுகளுக்கான தண்டனைகளின் போது தண்டனை விலக்களிப்புக்கு வேண்டுமானால் இத்தகைய நற்சான்றுகள் கவனத்தில் கொள்ளப்பட முடியும். அவ்வளவுதான்.

மைத்திரிபால சிறிசேனவைப் பொறுத்தவரை ஒரு விடயம் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். நாட்டின் பிரதமராக வருவதற்குக் கூட வாய்ப்பளிக்கப்படுவாரோ என்ற சந்தேக நிலையில் இருந்த அவருக்கு நாட்டின் நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவி என்ற உச்ச ஆட்சியதிகாரத்தை அப்போதைய எதிரணிகள், சிறுபான்மை இனத்தரப்புகள் எல்லாம் ஒன்றிணைந்து, மக்கள் ஆதரவைத் திரட்டி, அவருக்கு வழங்கின.

அதற்கான காரணம் ஒன்றுதான். இந்த நாட்டில் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினை என்ற புற்றுநோயை நாட்டில் இருந்து அகற்றி, நிரந்தர அமைதிக்கு – நிலையான சமாதானத்துக்கு – வழி செய்யும் அரசமைப்பு ஒன்றை நாட்டில் ஏற்படுத்துவது என்ற ஒன்றுக்காகத்தான் அவரை நாட்டு மக்கள் சேர்ந்து ஜனாதிபதியாக்கினார்கள். ஆனால் அவர் செய்தவை என்ன?

ஜனாதிபதியானதும் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியைத் பிடுங்கிப் பறித்தார். அதை வைத்துக் கொண்டு, நாட்டில் நிரந்தர தீர்வுக்கான அரசமைப்பை ஏற்படுத்துவதை விடுத்து, மற்றைய அரசியல் கட்சிகளுடன் மோதி, சின்னத்தனமான அரசியல் நடத்தி, தீர்வுக்குக் கிட்டிய அந்த அற்புதமான – அரிய – வாய்ப்பை நாசமாக்கிக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கினார்.

அத்தகைய வரலாற்றுத் கெடுதியை இந்த இலங்கைத் தீவுக்கு ஏற்படுத்திய ஒரு நெறியற்ற தலைவராகத்தான் சரித்திரம் அவரை நோக்கப் போகின்றது.

# கஜேந்திரன் எம்.பியைத் தான் கட்சியிலிருந்து நீக்க வேண்டும்!



### பார்த்திபன் காட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனை, தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து நீக்க வேண்டுமென யாழ். மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபையில் அங்கம் வகிக்கும் மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனுக்கு ஆதரவாக செயற்படும் 10 உறுப்பினர்களை பதவி வறிதாக்கபட்டுள்ளதாக தேர்தல் அலுவலகம் அறிவித்துள்ள நிலையில் அது தொடர்பில் யாழ்.மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்திபனிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக வரதராஜன் பார்த்திபன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

யாழ்ப்பாணம் மாநகர சபையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பாக 13 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றோம். அதில் இதுவரை 10 உறுப்பினர்களை தாங்கள் நீக்கிவிட்டார்கள் எனவும் அதன் அடிப்படையில் அவர்களின் மாநகரசபை உறுப்பினர் பதவியை வறிதாக்கும்படி யாழ்.தேர்தல்கள் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

முதற்கட்டமாக மாநகர முதல்வர் மணிவண்ணன் உட்பட 4 உறுப்பினர்களையும் இரண்டாம் கட்டமாக நான், தனுஜன் ஜெனன், பத்மமுரளி ஜெயசீலன், சுபாஜின் ஆகியோரை நீக்குவதாக தேர்தல்கள் திணைக்களததுக்கு அறிவித்திருக்கின்றனர். அதன் பிரகாரம் தேர்தல்கள் திணைக்களம் கடந்த வெள்ளிக்கிழமை எமக்கு உங்கள் மாநகர சபை உறுப்பினர் பதவிகள் வறிதாக்கப்பட்டுள்ளன என அறிவித்திருக்கின்றது.

கடந்த பல வருடங்களாக கட்சிக்காக விசுவமாக நடந்தமைக்கு கட்சி எமக்கு தந்துள்ள இப்பரிசிலை நாம் சட்ட ரீதியாக அணுகுவதற்கு முடிவெடுத்துள்ளோம்

கட்சியின் செயலாளர் எமக்கு அனுப்பிய கடிதத்தில், எங்கள் மீது சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அதன் அடிப்படையில் உங்களை எந்த ஒரு விசாரணையும் விளக்கமும் கோராமல் நீக்குவதாக அறிவித்திருந்தார்கள்.

எங்களை நீக்கியமைக்கு கூறிய பிரதான காரணம் கட்சிக்கு விசுவாசமின்மை, முன்னணியை அழிப்பதற்கு சதி செய்தமை, எமது அரசியல் இயக்கத்தின் கொள்கைகளை மீறியமை, எமது அரசியல் இயக்கத்துக்கு துரோகம் இழைத்தமை, குறித்த குற்றசாட்டுக்களின் அடிப்படையில் எம்மை கட்சியில் இருந்து நீக்குவது என்றால் முதலில் கட்சியில் இருந்து நீங்க வேண்டியவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ கஜேந்திரன் தான்.

எமக்கு வழங்கிய குற்றச்சாட்டில் கட்சிக்கு விசுவாசமின்மை, கட்சிக்கு துரோகம் இழைத்தமை, கட்சிக்குள் பிளவுகளை உருவாக்கியமை என்ற எம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் வெறும் சொற்களாகவே இருக்கின்றன. அதற்கான ஆதாரங்களோ ஆவணங்களோ எதுவும் இல்லை. ஆனால் இது தொடர்பில் நான் அனுப்பி வைத்த 47 பக்க கடிதத்தில், உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் கட்சியைப் பிளவுபடுத்துகின்ற கருத்துருவாக்கங்களை எப்படி விதைத்தீர்கள், அதனை எப்படி வளர்த்தீர்கள், எப்படி ஒருவரை பயன்படுத்தி விட்டு தூக்கி போட்டீர்கள், கட்சிக்குள் எவ்வாறு நயவஞ்சகமாக செயற்பட்டு அழித்தீர்கள். எப்படி சிறு சிறு குழுக்களை உருவாக்கினீர்கள் என்பதை நடந்த சம்பங்களைக் கொண்டும் அவர் நடந்து கொண்ட முறைகளையும் வைத்துக் கொண்டு ஆதாரபூர்வமாகவும் ஆவணரீதியாகவும் அதனை உறுதி செய்து கடிதம் எழுதியுள்ளேன்.

இவ்வாறு கடிதம் அனுப்பப்பட்டு இன்று ஒரு கிழமை ஆன போதும் அதற்கான பதில் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. கட்சியின் கொள்கைகளை நாம் இன்று நேசிக்கின்றோம். அதனை மக்களிடத்தில் கொண்டு செல்கின்றோம். ஆனால் ஒருவர் தேர்தல் அரசியலில் இருந்து விலத்தி நிற்கும் போது அவரை கெஞ்சி தேர்தல் அரசியலுக்கு கொண்டுவருவதும், அவரைக் கொண்டு பதவிகளை பிடித்த பின்னர் அவரை விலத்துவதும் அவருடன் கதைக்க வேண்டாம் அவருடன் தொடர்பு வைக்கவேண்டாம் என்று கூறுவதும் ஏற்புடையவை அல்ல. அத்துடன் அது அறமும் இல்லை. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்பு இறக்குமதி செய்யப்பட்ட 6,000 வாள்கள்!

### விவரம் கோரவுள்ளார் சட்ட மா அதிபர்

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களுக்கு முன்னர், தற்கொலை குண்டுதாரிகளில் ஒருவரான இன்சாப் அஹமட் என்பவரால் நாட்டுக்கு தருவிக்கப்பட்டதாகக் கூறப்படும் 6 ஆயிரம் வாள்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் நிலைமையை, பாதுகாப்பு செயலர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரிடம் கேட்டறிந்து நீதிமன்றுக்கு அறிவிப்பதாக சட்ட மா அதிபர் அறிவித்துள்ளார்.

சட்ட மா அதிபர் சார்பில் அரசின் சிரேஷ்ட சட்டவாதி கலாநிதி அவந்தி பெரேரா இதனை மேன் முறையீட்டு நீதிமன்றுக்கு கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தார்.

நாட்டுக்கு தருவிக்கப்பட்டதாகக் கூறப்படும் 6 ஆயிரம் வாள்கள் தொடர்பில் விடே விசாரணைகளைக் கோரி, பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மேன் முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த ரிட் மனு வெள்ளிக்கிழமை பரிசீலனைக்கு எடுக்கப்பட்ட போதே கலாநிதி அவந்தி பெரேரா இதனை அறிவித்தார்.

இந்த மனு வெள்ளிக்கிழமை மேன் முறையீட்டு நீதிமன்றின் தலைமை நீதிபதி அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாயதுன்ன கொரயா ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டிருந்தது.

அதன்படி இந்த மனு மீதான மேலதிக விசாரணைகள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நாட்டிலுள்ள பிரபல தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்ட போது, வெளிநாடுகளிலிருந்து 6 ஆயிரம் வாள்கள் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்குமாறும், விசாரணைகள் நடத்தப்பட்டிருப்பின் அதனை வெளிப்படுத்துமாறு கோரியே பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர், குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர், அரச புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் அந்த மனுவில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை சார்பில் , கொழும்பு சின்னமன் கிரேண்ட் ஹோட்டலில் தற்கொலை குண்டுத் தாக்குதல் மேற்கொண்டவரின் தேவைக்கு அமைய, முஸ்லிம் வர்த்தகர் ஒருவரால் குறித்த வாள்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டன எனத் தகவல் கிடைத்ததாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அத்துடன் அவற்றில் 600 வாள்கள் குறித்து தகவல் கிடைத்ததாகவும் ஏனைய 5 ஆயிரத்து 400 வாள்கள் எங்கு மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பில் உறுதியான தகவல்கள் கிடைக்காமையால், அது தொடர்பாக விசாரணை நடத்த பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு பிரிவினருக்கு உத்தரவிடுமாறு மனு ஊடாக கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.








# இந்துக்களுக்கு தொல்லியல் ஆய்வு! இஸ்லாமியருக்கு ஜனாஸா எரிப்பு! கத்தோலிக்கருக்கு ஈஸ்டர் குண்டு!

இனவாதத்தில் மூழ்கி இனவழிப்பில் சிக்கி அகதிகள் ஏற்றுமதியில் முதலிடம் பெற்று சின்னாபின்னமாகிச் சிதறுண்டு போயுள்ள இலங்கை, இப்போது "மதம்" பிடித்து வெறியாட்டம் ஆடுகிறது.

எழுபது ஆண்டுகளுக்கு மேலாக இனப்பிரச்சினையில் துவண்டு கொண்டிருக்கும் இலங்கை, கடந்த ஒரு தசாப்தமாக போர்க்குற்றம், மனிதகுலத்துக்கு எதிரான செயற்பாடு, ஒப்புக்கொண்ட பொறுப்புக்கூறலை நிறைவேற்ற மறுக்கும் அகங்காரப் போக்குகளால் சர்வதேசத்தின் முன்னால் கைதியாக நிற்கிறது.

உள்நாட்டில் தன்னை மீசையில் மண்படாத ஒரு வீரனாகக் காட்டிக் கொண்டாலும் ஜெனிவா குற்றச்சாட்டிலிருந்து தப்புவதற்காக உலக நாடுகளிடம் இரந்து நிற்கும் நிலையேற்பட்டுள்ளது.

கோட்டாபயவின் உள்வட்டக் கூட்டாளிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்கமாக உளற ஆரம்பித்துள்ளனர். சீனாவின் ஆதரவு தங்களுக்கே என்கிறார் ஒருவர். உலகநாடுகள் எங்கள் பக்கம் என்கிறார் இன்னொருவர். 21 நாடுகளின் ஆதரவு தங்களுக்கு உறுதியாகிவிட்டது என்கிறார் மற்றொருவர்.

ஆனால், அதே கோட்டாபய அணியின் மற்றும் சிலரது கருத்துகள் வித்தியாசமானவை மட்டுமன்றி விசித்திரமானவையாகவும் உள்ளன.

ஜெனிவாவில் இந்தியா நியாயத்தின் பக்கம் நின்று இலங்கையை ஆதரிக்க வேண்டுமென கெஞ்சும் பாணியில் வேண்டுகோள் விடுத்துள்ளார் அமைச்சரவை பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல. இலங்கை தனது எதிர்கால நலன்கருதி 13 ஆவது திருத்தத்தை அமுல் செய்து தமிழரின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டுமென்று ஜெனிவாவில் உரையாற்றிய இந்திய பிரதிநிதி விடுத்த கோரிக்கையை, இனவாத அமைச்சர் சரத் வீரசேகர நையாண்டி பண்ணியுள்ளார்.

'இது இந்தியாவின் வழமையான புலம்பல் என்பது இவரது கூற்று. ஒருவகையில் பார்க்கின் இருவருமே புலம்பல்தான். இலங்கை அரசு ஒருபோதும் நிறைவேற்ற விரும்பாத 13வது திருத்தத்தின் மீது அபார நம்பிக்கை கொண்டுள்ள இந்தியா, அதனையே செயற்படுத்துமாறு தொடர்ந்து கேட்டு வருவது தமிழரை ஏமாற்றும் ஒரு நாடகம்.

ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற இந்தியா ஆதரவு வழங்க வேண்டுமெனக் கேட்டுள்ளார் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன். எந்தத் தீர்மானத்தை என்றுதான் புரியவில்லை. பதினெட்டு மாத காலநீடிப்பையா?

தமது எதிர்கால அரசியல் பயணம் பற்றிய கேள்விக்குறியுடன் நிற்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பல படிகள் மேலேறி நின்று, எத்தனை பிரேரணைகள் நிறைவேறினாலும் தங்களை எவரும் எதுவுமே செய்ய முடியாதென எச்சரித்துள்ளார். பிரேரணை நிறைவேறினாலும் சரி, நிறைவேறாது போனாலும் சரி, தங்களுக்கு எல்லாமே ஒன்றுதான் என்பது இவரது அரசியல் அந்திமகால வீராவேசம்.

ஜெனிவாவை மையப்படுத்தி காரசாரமாக இடம்பெறும் கண்டனங்கள், எச்சரிக்கைகள், மன்றாட்டங்களுக்கு இந்த மாத 3 ஆவது வாரத்தில் விடை கிடைக்கும்.

இந்தப் பின்னணியில், இலங்கையில் இப்போது பூதாகரமாக பொங்கியெழும் மதவாத நடவடிக்கைகள் ராஜபக்ஷக்களின் அரசியலுக்கு அவசியமாகியுள்ளன.

இந்துக்கள், இஸ்லாமியர்கள், கத்தோலிக்கர்கள் என்னும் மும்மதத்தினரையும் அவர்களின் வழிபாட்டு நம்பிக்கையின் அடிப்படையில் சிறுபான்மையினராக்கி அடிமைப்படுத்தும் திட்டத்தை, ராஜபக்ஷக்கள் மெதுமெதுவாக மேற்கொண்டு வருகின்றனர்.

குடித்தொகையின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து சிங்களவரை பெரும்பான்மையினராக அடையாளப்படுத்தி, இலங்கை பெரும்பான்மையினரால் ஆளப்படும் நாடு எனவும், இங்கு வாழும் மற்றைய இனத்தவர்கள் சிறுபான்மையினர் எனவும் வகுத்து, அவர்களின் மதசார் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவதும் மறுக்கப்படுவதும் இப்போது வேகம் கொள்கிறது.

இலங்கை என்றால் இனப்பிரச்சினையுள்ள நாடு என்ற வரலாற்று அடையாளத்தை இப்பொழுது மதவாதமும் சேர்த்து அம்பலப்படுத்தி வருகிறது. மேலோட்டமாக சில அம்சங்களை இங்கு நோக்கலாம்.

இந்துக்களின் வழிபாட்டுத் தலங்களையும், புராதன பாரம்பரிய நிலங்களையும் அழித்தொழிக்கும் நோக்குடன் தொல்லியல் திணைக்களம் பேரினவாதத்துக்கு சாதகமான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. நீதிமன்றங்கள், நீதி மறுக்கப்படும் அல்லது நீதி பின்தள்ளப்படும் மன்றங்களாக மாற்றம் கண்டுள்ளன. தமிழரின் தாயகமான வடக்கு கிழக்கில் ஆயிரம் விகாரைகள் அமைக்கப்படுமென்று நல்லாட்சி அரசில் அமைச்சராகவிருந்தபோது சஜித் பிரேமதாஸ முன்மொழிந்த திட்டத்தை ராஜபக்ஷக்கள் நடைமுறைப்படுத்துகின்றனர்.

இஸ்லாமியர்கள் தங்கள் மத அடிப்படையில் ஜனாஸாக்களை அடக்கம் செய்யும் உரிமையை கொரோனா நோய்த்தொற்றை காரணம் காட்டி மறுக்கும் ஆட்சிபீடம், தான்தோன்றித்தனமாக அவற்றை எரித்து விடுகிறது. சர்வதேச மட்டத்துக்கு இதனை இஸ்லாமியத் தலைவர்கள் எடுத்துச் சென்றதையடுத்து சில நாள்களுக்கு முன்னர் மீண்டும் அடக்கம் செய்யும் வர்த்தமானி அறிவித்தல் வெளியானது.

ஆனால், அதற்கான விதிமுறைகள் வெளியிடப்படவில்லை. அதேசமயம் வடக்கே கிளிநொச்சிப் பிரதேசத்திலுள்ள இரணைதீவில் அடக்கத்துக்கான மையவாடியை அமைத்து தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையே இனமுறுகலை ஏற்படுத்தும் விதையை அரசு தூவியுள்ளது.

மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அவரவர்களின் பிரதேசத்தில் அடக்கம் செய்ய மறுப்பது, தொடர்ந்தும் அவர்களின் மத உரிமையைப் பறிக்கும் அத்துமீறல்.

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலையடுத்து உருவாகியிருக்கும் அசாதாரண சூழல், கத்தோலிக்க மக்கள் மீது அரசாங்கம் ஆரம்பித்திருக்கும் மறைத் தாக்குதலை காட்டுகிறது. அடுத்த மாதத்துடன் இக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்று இரண்டு வருடங்களாகப் போகிறது. இச்சம்பவத்தில் 270 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். 500இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இவர்களுள் கணிசமானோர் அங்கவீனர்களாகியுள்ளனர்.

கத்தோலிக்கர் எனப்படுபவர்கள் தனித்த ஓர் இனத்தவர்கள் அல்லர். சிங்களவர், தமிழர் ஆகிய இரு இனங்களிலும் கத்தோலிக்கர்கள் உளர். ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலில் மரணித்தவர்கள், காயமுற்றவர்களில் ஈரினங்களையும் சேர்ந்தவர்கள் உள்ளனர்.

ஆனால், ஆட்சித்தரப்பு சிங்கள, பௌத்தம் என்ற எதேச்சாதிகார கோட்பாட்டு நிலையில் இயங்குவதால், ஈஸ்டர் தாக்குதல் விசாரணையிலும் குற்றவாளிகள் மீதான நடவடிக்கைகளிலும் போதிய அக்கறை காட்டப்படவில்லை. இதுபோன்ற தாக்குதல் தலதா மாளிகை, அனுராதபுரம் ரஜமகா விகாரை அல்லது எங்காவது ஒரு பௌத்த வழிபாட்டுத் தலம் மீது இடம்பெற்றிருந்தால் இதுவரை விசாரணை முடிவுற்று, பலர் கைதாகி தண்டனையும் வழங்கப்பட்டிருக்கலாம்.

ஆனால், ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றது கத்தோலிக்கர்களான சிறுபான்மை மதக்குழுமத்தின் வழிபாட்டுத் தலங்கள் மீது. அதனாற்போலும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்த ஜனாதிபதி ஆணைக்குழுவையே விசாரணையைத் தொடர அனுமதிக்கப்பட்டது,

காரணம் கூறப்படாத இழுபறிக்குப் பின்னர் ஆணைக்குழு அறிக்கையின் பிரதிகள் மகாசங்கத்தினருக்கும், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும் கையளிக்கப்பட்டன. விசாரணை திருப்திகரமாக நடைபெறவில்லையென்றும், திட்டமிட்டு நடத்தப்பட்ட இத்தாக்குதல் தொடர்பான குற்றங்கள் மறைக்கப்படக் கூடாதெனவும் சுட்டிக் காட்டியுள்ள பேராயர், முதன் முறையாக சிங்கள அரசுக்கு ஓர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அடுத்த மாதம் (ஏப்ரல்) 21 ஆம் திகதிக்கு முன்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதி கிடைக்காவிட்டால், அன்றைய தினம் கறுப்புக்கொடி பறக்க விடப்படுமென்பது இவரது முன்னறிவித்தல்.

இந்த அறிவித்தலை 'முதன்முறையாக' என்று சுட்டுவதற்கு நியாயமான காரணமுண்டு. கடந்த காலங்களில் பேராயர் எந்தவொரு வேளையிலும் அரசுக்கு எதிராக இவ்வாறு நடந்து கொள்ளவில்லை.

பொல்காவலை என்ற சிங்கள கிராமத்தில், 14 பிள்ளைகள் உள்ள குடும்பத்தில் மூத்தவராகப் பிறந்தவர் இவர். எனவே குடும்ப உறவு, சகோதர பாசம், உறவினர் மீதான பிடிமானம் என்பவை இவருக்குப் பிறப்பால் கிடைத்திருக்கும். இவர் வகிக்கும் பேராயர் பதவி என்பது சகலரையும் சமமாக மதித்து ஆன்மிகப் பணியாற்றும் மகிமை வாய்ந்தது.

> **"குடித்தொகையின் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து சிங்களவரை பெரும்பான்மையினராக அடையாளப்படுத்தி, இலங்கை பெரும்பான்மையினரால் ஆளப்படும் நாடு எனவும், இங்கு வாழும் மற்றைய இனத்தவர்கள் சிறுபான்மையினர் எனவும் வகுத்து, அவர்களின் மதசார் அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவதும் மறுக்கப்படுவதும் இப்போது வேகம் கொள்கிறது."**

தமிழர் தங்கள் உரிமைப் போராட்டங்களை நடத்திய வேளைகளில், சிங்கள அரச இயந்திரம் அவர்கள் மீது கோரத்தாக்குதலை நடத்தி கொன்றழித்தபோது பேராயர் ஒருபோதுமே அதனைக் கண்டிக்கவில்லை. நவாலி தேவாலயம், நாகர்கோவில் பாடசாலை என்பவற்றின் மீது சிங்கள தேசத்து யுத்த விமானங்கள் குண்டு வீச்சு நடத்தி பல நூற்றுக்கணக்கானவர்களை கொன்று குவித்தபோதும் மௌனம் காத்த பெரும்துறவி இவர்.

எப்போதும் சிங்கள அரசாங்கங்களின் நம்பிக்கைக்குரியவராகவே இவர் தம்மைக் காட்டிக் கொண்டவர். 'நான் முதலில் ஒரு சிங்களவன். பின்னரே ஒரு கத்தோலிக்கர்' என்ற பாணியில் தம்மை தமது செயற்பாடுகளால் காட்டிக் கொண்டவர்.

2015 ஆம் ஆண்டு புனித பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்தபோது, சுமார் 80 லட்சம் ரூபாக்கள் கொண்ட உறையொன்றை பேராயர் அவரிடம் கையளித்தார். ஆனால், அப்பணத்தில் இலங்கை அரசின் (மஹிந்த ஆட்சி) பங்கும் இருந்தது என்பதை அறிந்த பாப்பரசர் அப்பணத்தை பகிரங்கமாக பேராயரிடம் திருப்பிக் கொடுத்தமை ஊடகங்களில் பிரசித்தமான செய்தி.

சர்வதேச நாடுகளின் தலையீட்டை இல்லாதொழிக்க இலங்கையர் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென எப்போதும் வேண்டுகோள் விடுக்கும் பேராயர், ஈஸ்டர் தாக்குதலுக்கு கறுப்புக்கொடி ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது சிங்கள பௌத்தத்தின் உண்மை முகத்தை உலகுக்கு உணர்த்த உதவலாம். சிலவேளை, ஏப்ரல் 21 இற்கு முன்னர் கறுப்புக் கொடியை பேராயர் கைவிடவும் கூடும்.

எனினும், இலங்கையில் இனவாதத்துக்கு நிகராக மதவாதமும் தலைவிரித்துவிட்டது என்பதை கண்கூடாகப் பார்க்க முடிகிறது. தன்னை சிங்கள பௌத்த தலைவனென்றும், அதை வெளிப்படுத்த தான் ஒருபோதும் தயங்கப் போவதில்லையென்றும் அறைகூவுகின்ற ஒருவர் நாட்டின் ஜனாதிபதி என்றால், இதுவென்ன இன்னும் கனக்க வரும் என்று கூறாதிருக்க முடியவில்லை.

**நன்றி:-'பதிவு' இணையம்**

# ஆசிரியர் இடமாற்றம்
# தீராத நிரந்தரத் தலைவலி

ந.லோகதயாளன்




யாழில் இருந்து வன்னி செல்லும் ஆசிரியர்களுக்கு பிரதான வீதியோரம் உள்ள பாடசாலையை வழங்கி வன்னி ஆசிரியர்களை கிராமப் பாடசாலைக்கு நியமிக்கவும், ஏனெனில் யாழில் இருந்து நூறு கிலோ மீற்றர் வரை பயணிப்பவர்கள் மேலும் பத்து தொடக்கம் பதினைந்து கிலோ மீற்றர் அலைக்கழிக்கப் படுவதாக ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டு கடமைக்கு செல்லாத ஆசிரியர்களிற்கு சேவை இடை நிறுத்த உத்தரவு வழங்க அவசரப்படும் ஆளுநர், அதே மன்னாரில் இருந்து ஒரே மாவட்டமான மடுவிற்கு இடமாற்றம் வழங்கப்பட்டபோது செல்ல மறுத்தவர்களிற்கு என்ன நடவடிக்கை எடுத்தார் என ஆசிரியர்கள் சார்பில் கேள்வி எழுப்பப்படுகின்றது.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத்தலைவர்களான மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சாள்ஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ஆகியோர் தலைமையில் கடந்தவியாழனன்று இடம்பெற்றது. இதன்போது 2020ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இடமாற்றத்தின் மூலம் 2021.01.01 முதல் மன்னார் மாவட்டத்தில் கடமையாற்ற வேண்டிய 40 ஆசிரியர்கள் இன்றுவரை மன்னாரிற்கு சமுகமளிக்கவில்லை எனவும், இறுதியாக கல்வியல் கல்லூரியில் இருந்து வெளியேறிய ஆசிரியர்களில் 59 ஆசிரியர்கள் மன்னாரிற்கு நியமிக்கப்பட்டனர். இருப்பினும் 55 பேர் மட்டுமே கடமையை பொறுப்பேற்றபோதும் நால்வர் மாவட்டத்திற்கே தெரியாது இடமாற்றம் பெற்றுவிட்டனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது இணைத்தலைவரும் மாவட்ட ஒருங்கிணைப்பு இணைத் தலைவருமான மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சாள்ஸ் இடமாற்றம் வழங்கப்பட்ட 40 ஆசிரியர்களும் உடன் மன்னாரில் கடமையை பொறுப்பேற்க வேண்டும் அல்லது உடனடியாக இடை நிறுத்தம் வழங்குமாறும், கல்வியல் கல்லூரியின் 4 ஆசிரியர்களிற்கும் வழங்கப்பட்ட நியமன மாற்றத்தை இரத்துச் செய்வதோடு இடமாற்றத்தை அனுமதித்த அதிகாரிகளின் விவரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்,



அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பணித்திருந்தார்.

இது தொடர்பிலேயே தற்போது குறித்த ஆசிரியர்களில் பெயர் குறிப்பிட விரும்பாத ஆசிரியர் ஒருவர் சர்ச்சைக்குரிய கருத்துரைக்கையில் –

பாடசாலைகளில் நீண்ட காலமாக ஆளணி அங்கீகாரம் புதுப்பிக்கப்படவில்லை.

மன்னார் மாவட்டத்தினை பொறுத்த மட்டில் அல்ல வடக்கில் பல இடங்களில் போர்க்காலத்தில் இருந்த அதிக மாணவர்களின் எண்ணிக்கையை வைத்தே இன்றும் ஆளணி கணக்கிடுகின்றனர். இதன் அடிப்படையிலேயே அங்கே 232 ஆசிரிய வெற்றிடம் நிலவுவதாக கணக்கிடப்படுகின்றது. இருப்பினும் அண்மையிலும் மன்னாரிற்கு 185 ஆசிரியர்கள் வழங்கப்பட்டு விட்டது. இதேநேரம் கல்வியல் கல்லூரியில் இருந்து வெளிவரும் ஆசிரியர்களின் அடுத்த அணியும் தயாராகியுள்ளதனால் அதன் மூலமும் ஓரளவு நிவர்த்தி செய்யும் வாய்ப்பும் உள்ளது. இதேபோன்று கல்வியல் கழக ஆசிரியர்களில் 59 பேர் நியமிக்கப்பட்டு 55 பேர் கடமையேற்று 4 பேர் பணியேற்கவில்லை என்பது உண்மையானது. ஆனால் அவர்கள் மகப்பேற்று தாய்மார்கள் என்பதனை மறந்துவிட்டனர்.

மன்னாரில் தற்போது காணப்படும் 100 வரையான வெற்றிடத்தில் அதிகமான பாடங்கள் யாழ்ப்பாண வலயத்தில் கூட பற்றாக்குறையாகவே உள்ளது. அதாவது யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 67 வெற்றிடங்கள் இன்றும் உள்ளது. இந்தச் சூழலில் ஆண்டு தோறும் யாழ்ப்பாண ஆசிரியர்கள் மன்னாரிற்கு செல்லவில்லை, முல்லைத்தீவிற்கு செல்லவில்லை, வவுனியாவிற்கு செல்லவில்லை என்ற குறை மட்டும் கூறப்பட்டு யாழ்ப்பாண ஆசிரியர்கள் ஏதோ இரக்க மற்றவர்கள் அல்லது பொது நலமற்றவர்கள் என அரசியல்வாதிகள் கூறுவதுபோன்று திணைக்களமும் ஆளுநரும், சில அதிகாரிகளும் கூற முற்படக் கூடாது. அவ்வாறானால் இதற்கு நாம் கடந்த 10 ஆண்டுகளாக விடுக்கும் கோரிக்கை இன்றுவரை சகலராலுமே இருட்டடிப்பு செய்யப்படுகின்றது.

யாழில் இருந்து 150 மைல் பயணிப்பவனை மேலும் 30 மைல் அலைக்கழிக்கப்படுகின்றது.

அதாவது யாழ்ப்பாணத்தில் இருந்து நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் மன்னாரோ அல்லது முல்லைத்தீவோ வடக்கின் எந்த மாவட்டமானாலும் சரி மாவட்டத்திற்கு சென்று, அங்கிருந்து மேலும் 30 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பாடசாலைகளிற்கு செல்லவில்லை எனில் யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள் சேவை மனப்பான்மை அற்றவர்கள் எனக் கூற முற்படுகின்றனர்.



இதேநேரம் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மாவட்டத்தையே சொந்த இடமாகக் கொண்ட ஆசிரியர்களை கிராமத்திற்கு நியமித்து யாழில் இருந்து செல்லும் ஆசிரியர்களிற்கு நகரத்தை தாருங்கள் அல்லது பிரதான வீதியோரம் உள்ள பாடசாலைகளை தாருங்கள் என்ற கோரிக்கையை நிராகரிக்கும் ஆசிரியர்கள் சேவை மனப்பான்மை கொண்ட ஆசிரியர்கள் பட்டியலில் உள்ளடக்கப்படுகின்றனர். இதனை இதுவரை எந்த அதிகாரிகளோ அல்லது அரசியல்வாதிகளோ கேட்பதே கிடையாது.

### சொந்த மாவட்டத்திற்குள் இடமாற்றத்தை நிராகரித்தோர்

2019ஆம் ஆண்டு இறுதியில் மன்னார் வலயத்தில் இருந்து மடுவிற்கும், முல்லைத்தீவில் இருந்து துணுக்காய் வலயத்திற்கும் அதாவது ஒரே மாவட்டத்திற்குள் 80 ஆசிரியர்களிற்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. இதில் முல்லையில் இருந்து ஒரு சிலர் மட்டுமே சென்றபோதும் ஏனையோர் செல்லவில்லை என்பதோடு மன்னாரில் இருந்து மடுவிற்கு நியமித்த ஒருவர் கூட அங்கு செல்லாது அனைவருமே மறுத்து விட்டனர். சொந்த மாவட்டத்திலேயே இதுதான் நிலைமையாகவுள்ளது. இவற்றிற்கு தீர்வை வழங்கிய பின்பு எமக்கு நடவடிக்கை எடுக்கலாம். தவறும் பட்சத்தில் நீதிமன்றங்களும் உள்ளனவே. – என்கின்றார்.

இது தொடர்பில் மன்னாரில் நிலவும் வெற்றிடம் தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது –

ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் 41, கணிதம் 23, அழகியல் 29, தொழில் நுட்பம் 10, விஞ்ஞானம் 7, இடைநிலை 7 ஆகிய பாட ஆசிரியர்களிற்கான வெற்றிடம் உண்டு என்ற பட்டியலை விவரிக்கின்றார்.

இவை தொடர்பில் மாகாண அதிகாரிகளை தொடர்பு கொண்டு கேட்டால் உண்மையில் இதற்கு பொதுவான ஓர் குழுவை நியமித்து ஒவ்வொரு மாவட்ட ஆசிரியர்கள் கூறிய கருத்தின் அடிப்படையில் மாவட்ட ரீதியாக ஆராய்ந்து ஒரே விதமான நடைமுறையை மேற்கொண்டால் மட்டுமே தீர்வு எட்ட முடியும் என்கின்றனர்.

இதேநேரம் நியமனம் முதல் ஓய்வு வயதை அடையும் காலம் வரை பிற மாவட்டமே காணாத யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள் இன்றும் சேவையில் உள்ளனர் என்ற குற்றச் சாட்டினையும் மறுக்க முடியாதபோதும் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சியை சொந்த இடமாகக் கொண்ட 200 வரையான ஆசிரியர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் பணியாற்றுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் வடக்கு மாகாணத்தில் கடந்த 5 ஆண்டுகள் தரம் ஒன்றில் இணைந்த மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய தரவு, பிறப்பு வீதம் மிக குறைவடைவது உறுதி செய்துள்ளது. அரச உத்தியோகத்தர் குடும்பங்களே மிக எண்ணிக்கை குறைந்த பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களாக இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு காலம் தாழ்த்திய திருமணத்திற்கும் அப்பால் திருமணத்தின் பின்பும் கணவன் ஓர் இடத்திலும் மனைவி ஓர் இடத்திலும் பணியாற்றுவது முக்கிய காரணமாகவும் கூறப்படுகின்றது.

இதேபோன்று தூர இடங்களில் பணியாற்றுவதனால் தனது துணையின்றி மனைவி தொடர்ந்தும் வேலைச் சுமைக்கு உட்பட வேண்டும் என்ற மன அழுத்தம் அல்லது மாத வருமானத்தினைவிட அதிகரித்த செலவு, வெளி மாவட்டத்தில் பணியாற்ற வேண்டும் என்பதற்காகவே குழந்தைப் பேற்றுக்குச் சென்றனர் என்ற நையாண்டிகளின் காரணமாகவும் பலர் குழந்தைப் பேற்றை தள்ளி வைப்பதாகவும் நியாயமான காரணம் கூறப்படுகின்றது.

போர் முடிந்து 12 ஆண்டுகளாக நீடிக்கும் இந்த பிரச்சினைக்கு இன்றுவரை ஓர் நிரந்தரத் தீர்வு எட்டப்படாதமை வேதனைக்குரியதே.

# சீன மின் திட்டங்கள் இந்தியாவிற்கு மாத்திரமல்ல இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல்!

## முஜிபுர் எச்சரிக்கை



இலங்கையின் வடக்கு தீவுகளில் முன்னெடுக்கப்படும் சீனாவின் மின்னுற்பத்தி திட்டங்கள் இந்தியாவிற்கு மாத்திரமல்ல இலங்கையின் தேசியப் பாதுகாப்பிற்கும், சுயாதீனத்தன்மைக்கும், அபிவிருத்திக்கும் பாரிய அச்சுறுத்தலாகும். எனினும் அரசாங்கம் இதனைப் புரிந்து கொள்ளவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் றஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

தேசிய பொருளாதாரம் , நாட்டு மக்களின் பொருளாதாரம் என்பவற்றை மேம்படுத்துவதற்கான எந்தவொரு வேலைத்திட்டமும் அரசாங்கத்திடமில்லை.

குறிப்பாக சர்வதேசத்துடன் சுமுகமாகப் பயணிக்கக் கூடிய வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்வதற்கான வேலைத்திட்டமும் அரசாங்கத்திடமில்லை.

மாறாக, அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பது மாத்திரமே இவர்களின் தேவையாகும்.

எதிர்வரும் தேர்தல்களிலும் இந்த அரசாங்கம் இதனையே செய்யும். ஆனால் சமூகத்தில் அவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்பதை உறுதியாகக் கூறுகின்றோம்.

ஆட்சியைப் பொறுப்பேற்று ஒரு வருடத்திற்குள்ளேயே அரசாங்கம் அனைத்து விடயங்களிலும் தோல்வியடைந்துள்ளது. தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்கிறது. சர்வதேசத்தின் மத்தியில் தொடர் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளோம்.

இந்தியாவிலிருந்து 40 கிலோ மீற்றர் தூர இடைவெளியில் இலங்கையில் அமைந்துள்ள தீவுகளில் மின் உற்பத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு சீனாவிற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்தியாவுடனான முரண்பாடுகள் மேலும் வலுவாகிக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையில் பாரிய போட்டியிருப்பது உலகில் அனைவரும் அறிந்த விடயங்களாகும். அந்த போட்டியில் சிக்கியுள்ள நாடாக இலங்கை காணப்படுகிறது. இது மிகவும் பாரதூரமான அச்சுறுத்தலாகும்.

இந்தியாவிலிருந்து 40 கிலோ மீற்றர் தூர இடைவெளியில் இலங்கையில் அமைந்துள்ள தீவுகளில் மின் உற்பத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு சீனாவிற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளமையால் இந்தியாவின் பகைமையை அதிகரித்துக் கொள்கின்றோம். இது தேசிய பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாகும்.

அரசாங்கத்திற்கு முறையான வெளிநாட்டு கொள்கையும் இல்லை என்பது இதன் மூலம் தெளிவாகிறது. ஆகக் குறைந்தது, இராஜதந்திர மட்டத்தில் இதனை எவ்வாறு அணுகுவது என்ற தெளிவு கூட இந்த அரசாங்கத்திடம் இல்லை.

முழு உலகமும் சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான போட்டியை அறிந்துள்ள போதிலும், இந்தியாவிற்கு அருகிலுள்ள தீவுகளில் சீனாவிற்கு வாய்ப்பளிப்பது தேசிய பாதுகாப்பிற்கும், சுயாதீனத்தன்மைக்கும், அபிவிருத்திக்கும் பாரிய அச்சுறுத்தலாகும். அரசாங்கத்திற்கு இது புரியவில்லை. - என்றார்.

# ராமான்ய மற்றும் அமரபுர பீடங்களுக்கும் ஞாயிறு தாக்குதல் அறிக்கை கையளிப்பு!





உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கையின் பிரதிகள் ராமான்ய மற்றும் அமரபுர மகாநாயக்க தேரர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

பெப்ரவரி முதலாம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்ட குறித்த அறிக்கையின் பிரதிகள் கடந்த வெள்ளிக்கிழமை ராமான்ய மகா நிக்காயவின் மகாநாயக்க தேரர் மகுலேவே விமல் தேரர் மற்றும் அமரபுர மகா நிக்காயாவின் பதில் மகாநாயக்க தேரர் கங்துனே அஸ்ஸஜீ தேரர் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன.

ஜனாதிபதியின் சட்ட பணிப்பாளர் நாயகம் ஹரிகுப்த றோஹணதீர வால் அறிக்கையின் பிரதிகள் கையளிக்கப்பட்டன.

கடந்த வாரம் அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களுக்கும், பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மேலும் மட்டுப்படுத்தப்படும் பணவீக்கம் - மத்தியவங்கி!

இந்த ஆண்டில் உணவுப்பொருள்களின் விலைகள் தளம்பல் நிலையிலுள்ள போதிலும் பணவீக்கம் குறைவான மட்டத்திலேயே காணப்படுகின்றது என்றும் ஆண்டின் எஞ்சியுள்ள காலப்பகுதியில் பணவீக்கம் மேலும் மட்டுப்படுத்தப்படுமென எதிர்பார்ப்பதாகவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் நாணயச்சபைக் கூட்டத்தின் போதே இந்த விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன.

அதன்படி நாட்டின் பேரண்டப் பொருளாதார நிலைமைகளையும் உள்நாடு மற்றும் உலகளாவிய ரீதியில் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகளையும் கருத்திற்கொண்டு துணைநில் வைப்பு வசதி வீதத்தை 4.50 சதவீதமாகவும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தை 5.50 சதவீதமாகவும் பேணுவதற்கு மத்திய வங்கியின் நாணயச் சபை தீர்மானித்துள்ளது.

அத்தோடு தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நடவடிக்கையின் மீட்சிக்கு ஆதரவளிக்கும் நோக்கில், உற்பத்தித் திறன் கூடிய துறைகளுக்கு முனைப்புடன் கடன் வழங்கும் வகையிலான நிதியியல் முறைமைக்கான தேவை குறித்தும் நாணயச்சபை வலியுறுத்தியுள்ளது.

மேலும் குறைவான பணவீக்க நிலைமையில், பொருளாதாரம் உறுதியாகப் புத்துயிர் பெறும் அறிகுறிகளைக் காண்பிக்கும் வரையில் குறைந்த வட்டிவீதக்கட்டமைப்பைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை இலங்கையின் பொருளாதாரம், கொள்கை ரீதியான தூண்டுதல்கள் மற்றும் மேம்பாடடைந்துவரும் வியாபார சிந்தனைகளின் விளைவாக இந்த ஆண்டு குறிப்பிடத்தக்களவு மீட்சியடையும் என்றும் மத்திய வங்கியின் நாணயச்சபை எதிர்பார்ப்பு வெளியிட்டிருக்கிறது.

அதேபோன்று கடந்த 2020 ஆம் ஆண்டு இறக்குமதிகள் மீதான செலவினத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்று ஏற்பட்டமையின் விளைவாக, கடந்த வருடத்துக்கான வர்த்தகப் பற்றாக்குறை 200 கோடியால் சுருக்கமடைந்துள்ளது.

இந்நிலையில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள உரிய நடவடிக்கைகளின் மூலம் இந்த ஆண்டுக்கான வர்த்தகப் பற்றாக்குறை மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படுமென்றும் நாணய சபை எதிர்வுகூறியிருக்கிறது.

அத்தோடு இந்த ஆண்டில் உணவுப்பொருள்களின் விலைகள் தளம்பல் நிலையிலுள்ள போதிலும் பணவீக்கம் குறைவான மட்டத்திலேயே காணப்படுகின்றது.

ஆண்டின் எஞ்சியுள்ள காலப்பகுதியில் பணவீக்கம் மேலும் மட்டுப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன் நடுத்தரகாலத்தில் பணவீக்கத்தை 4 - 6 சதவீதம் என்ற வீச்சில் பேணுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# வவுனியாவில் பொலிஸ் தாக்குதல் வைத்தியசாலையில் ஒருவர் சேர்ப்பு!

வவுனியாவில் புளியங்குளம் பொலிஸாரால் தாக்கப்பட்ட ஒருவர் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் -

வவுனியா - புளியங்குளம் - இராமனூர் பகுதியில் வசிக்கும் ஆறுமுகம் பாலகிருஷ்ணன் (வயது - 50) என்பவரின் வீட்டுக்கு கடந்த வியாழக்கிழமை மாலை சென்ற புளியங்குள பொலிஸார் இடியன் துப்பாக்கி இருக்கின்றதா? என விசாரித்து மேற்படி நபரை கைது செய்துள்ளார்கள்.

கைது செய்து சென்ற நபரை தாக்கி விட்டு மீண்டும் நள்ளிரவு 12 மணியளவில் விடுதலை செய்துள்ளனர் எனவும், விடுதலை செய்யப்பட்ட நபர் வெள்ளிக்கிழமை வீட்டாரின் உதவியுடன் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் எனவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

# சட்டவிரோதமான மண் அகழ்வு: மூவர் வாகனங்களுடன் கைது!

மட்டக்களப்பு, மார்ச்.07



மட்டக்களப்பு, மண்முனை மேற்கு பிரதேசத்தின் வவுணதீவு பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வில் ஈடுபட்ட மூன்று வாகனங்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிஷாந்த கப்புகாமியின் ஆலோசனைக்கமைய பொலிஸ் உத்தியோகத்தர்களால் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் அரசடிச்சேனை, பாம்பர் சேனைப் பகுதியில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது பெக்கோ கனரக வாகனம் ஒன்றும் மண் ஏற்றிய நிலையில் இரண்டு உழவு இயந்திரங்களும், அதிலிருந்த மூன்று நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் உரிய அனுமதிப்பத்திரம் இல்லாமல் மண் அகழ்வில் ஈடுபட்ட போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவரையும் குறித்த வாகனங்களையும் நேற்று சனிக்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர் என வவுணதீவு பொலிஸ் பொறுப்பதிகாரி நிஷாந்த கப்பு காமி தெரிவித்தார்.

# ஹற்றனில் தேயிலை மலையில் ஆணின் சடலம் கண்டெடுப்பு!



ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்டிரதன் தோட்டம் சித்தரவத்தைப் பிரிவு தேயிலை மலைப் பகுதியில் ஆணின் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் கடந்த வெள்ளிக்கிழமை மதியம் கண்டெடுக்கப்பட்டதாகவும் 55 முதல் 60 வயது மதிக்கத்தக்க ஒருவரே உயிரிழந்துள்ளார் எனவும் ஹற்றன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இது கொலையா, தற்கொலையா என்பது தொடர்பாக விசாரணை இடம்பெற்று வருகின்றமையுடன் மரண விசாரணைகளின் பின்னர் சடலம் வைத்திய பரிசோதனைக்காக டிக்கோயா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# இராணுவத்தை ஒருபோதும் காட்டிக்கொடுக்க மாட்டோம்!

## காமினி லொக்குகே உறுதி



ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைக்கும் அரசாங்கத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

கடந்த அரசாங்கத்தில் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவில் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமா என ஜனாதிபதி வினவியபோது மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை இணக்கம் தெரிவிக்கவில்லை.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் முறையான விசாரணை நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது எனப் போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

சர்வதேச போக்குவரத்து தினத்தை முன்னிட்டு கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை தொடர்பாக மாறுப்பட்ட பல கருத்துக்கள் தோற்றம் பெற்றுள்ளன.

நாட்டு மக்கள் குறிப்பாக கத்தோலிக்க மக்கள் அறிக்கை தொடர்பில் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

முழுமையற்ற அறிக்கையை ஆணைக்குழுவினர் சமர்ப்பித்துள்ளார்கள் என்பதை ஆளும் தரப்பின் பெரும்பாலான உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை தொடர்பான பொறுப்பை அரசாங்கத்தால் ஏற்க முடியாது.

கடந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் ஏதேனும் மாற்றம் ஏற்படுத்த ஜனாதிபதி முனைந்தபோது அதற்கு மெல்கம் ரஞ்சித் கர்தினால் ஆண்டகை இடமளிக்கவில்லை.

ஆணைக்குழுவில் மாற்றம் ஏற்படுத்தாமல் துரித அறிக்கையைக் கோரினார்கள். சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணை அறிக்கை நிறுத்தப்படவில்லை. விசாரணை நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

ஆகவே, ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் நிறைவேற்றும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் முழுமையாக நிராகரித்துள்ளது.

நாட்டுக்கு எதிராக எத்தனை பிரேரணைகள் கொண்டுவந்தாலும் ஒருபோதும் இராணுவத்தினரைக் காட்டிக்கொடுக்கமாட்டோம். இராணுவத்தினரை பாதுகாக்க விசேட பொறிமுறை சட்டத்தின் ஊடாக வகுக்கப்படும். – என்றார்.

## வெள்ளவத்தையில் விபத்து: ஒருவர் பலி; மூவர் காயம்!

மதுபோதையில் வாகனம் செலுத்திய ஒருவரால் வெள்ளவத்தையில் நேற்று (சனிக்கிழமை) காலை ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த விபத்து சம்பவத்தில் 3 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## பொதுச் சபைக் கூட்டம்

நீர்வேலி அருள்மிகு செல்லக் கதிர்காம ஆலய அறங்காவலர் சபை பொதுச் சபைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஆலய அறங்காவலர் சபை தலைவர் இ.தயாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு மற்றும் பாலஸ்தாபனம் செய்து திருப்பணி செய்தல் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதால் ஆலயத்தின் அனைத்து முருகன் அடியார்களையும், உபயகாரர்களையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் ஆலய அறங்காவலர் சபையினர் அழைக்கின்றனர்.

# விமானப்படையின் 70 ஆவது ஆண்டு விழா விமான வான் சாகசக் கண்காட்சி நிறைவு!





இலங்கை விமானப்படையின் 70ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட விமான வான் சாகச கண்காட்சியின் நிறைவு விழா, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் காலி முகத்திடலில் இடம்பெற்றது.

மேற்படி விழா, மூன்று தினங்களாக நடைபெற்ற வான் சாகச கண்காட்சி, கடந்த 3ஆம் திகதி ஆரம்பமாகியது. இந்த நிகழ்வை இலங்கை விமானப்படை மற்றும் இந்திய விமானப்படை இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

இறுதி நாள் நிகழ்வில் பங்கேற்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பதிரனவால் வரவேற்கப்பட்டார்.

1951 மார்ச் 2 ஆம் திகதி, ரோயல் விமானப் படையாக நிறுவப்பட்ட இலங்கை விமானப்படை, 1972 மே 22ஆம் திகதி, இலங்கை விமானப்படையாக மாற்றப்பட்டது.

30 ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தை நிறைவுசெய்யும் மனிதாபிமான நடவடிக்கைக்கு விமானப்படை, தனது தீவிர பங்களிப்பை வழங்கியிருந்தது.

விமான வான் சாகச கண்காட்சியை பார்வையிடுவதற்கு பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ. இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி யோஷித ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மேற்கு முனைய அபிவிருத்தி செய்ய மறுத்தது இந்தியா!

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை அபிவிருத்தி செய்ய இந்தியா இணங்கியுள்ளதாக வெளியான கருத்தை அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சு உத்தியோகபூர்வமாக மறுத்துள்ளது.

இலங்கையின் மேற்கு முனையத்தில் முதலீடு செய்வதற்கு அதானி நிறுவனத்தின் முன்மொழிவுக்கு இந்திய உயர் தூதரகம் இணங்கியுள்ளதாக வெளியான செய்தியில் உண்மை இல்லை எனவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை 35 வருடகால ஒப்பந்த அடிப்படையில் ஜப்பானுடன் இணைந்து அபிவிருத்தி செய்ய இந்தியா இணங்கியுள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக வெவ்வேறுபட்ட கருத்துக்கள் வெளியானமையைத் தொடர்ந்தே இந்திய வெளியுறவுத் துறை அமைச்சு இவ்வாறு மறுப்பு தெரிவித்துள்ளது.

# ஐந்து வருடங்களின் பின்னர் உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலை அதிகரிப்பு

எரிவாயு சிலிண்டரின் விலைகளை அதிகரிக்க இரு உள்நாட்டு நிறுவனங்கள் நுகர்வோர் அதிகார சபையிடம் கோரியுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலையில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் இந்த இரண்டு எரிவாயு விநியோக நிறுவனங்களின் கோரிக்கை அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.






# வாக்கெடுப்பில் தோற்றாலும் போர்க்குற்ற விசாரணை என்ற பேச்சுக்கே இடமில்லை!

## சரத் வீரசேகர கிடுகுப்பிடி



ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரும் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் தோல்வியுற்றாலும் உள்ளக விவகாரங்களில் சர்வதேச நாடுகள் தலையிட விடப்போவதில்லை என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், எவர் வலியுறுத்தினாலும் போர்க்குற்ற விசாரணையை நடத்த இடமளிக்கப் போவதில்லை என்றும் கூறினார்.

இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரும் பிரேரணை தொடர்பாக இந்தியா தற்போது அமைதியாக இருந்தாலும் இறுதி நேரத்தில் எமக்கு ஆதரவாகவே செயற்படுவார்கள் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

மனித உரிமைகள் ஆணையாளரால் இலங்கை தொடர்பாக முன்வைத்த அறிக்கை பொய்யான அறிக்கை எனக் குறிப்பிட்ட சரத் வீரசேகர, இந்த அறிக்கையை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## 01.03.2021 தொடக்கம் 06.03.2021 வரையிலான சந்தையில் முக்கிய பயிர்களின் விலை நிலைவரம் ஒரே பார்வையில்!

### தம்புள்ள, Pettah, சந்தையின் விலை நிலைவரம்

01.03.2021 தொடக்கம் 06.03.2021 வரையான காலப்பகுதியில் பெற்றா, தம்புள்ள சந்தைகளில் தேசி, உள்ளூர் சிவப்பு வெங்காயம், பெரிய வெங்காயம், தேங்காய், கோவா, தக்காளி, போஞ்சி, கரட், கத்தரி, பூசணி, பச்சை மிளகாய், பப்பாளி, அன்னாசி போன்ற பயிர்களின் விலைகளில் தளம்பல் நிலை அவதானிக்கப்பட்டது இதனால் இவை முக்கிய கவனத்துக்குரிய பயிர்களாக இருந்தன.

நாவுல, யதவத்தா, நுவரலியா மற்றும் மாத்தளை பகுதிகளிலிருந்து குறைந்த வழுங்கல் அல்லது சாதகமான வழுங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் போஞ்சி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

நுவரலியா, கந்தபோலா, ராகலா பகுதிகளிலிருந்து குறைந்த வழுங்கல் அல்லது சாதகமான வழுங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் கரட்டின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

யாழ்ப்பாணம், புத்தளம், தம்புள்ளையை அண்டிய பகுதிகள் மற்றும் நொச்சியகம பகுதிகளில் இருந்து குறைந்த வழுங்கல் காரணமாக அல்லது சாதகமான வழுங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் பச்சை மிளகாயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

மொனராகல மற்றும் பிபிலி பகுதிகளில் இருந்து சாதகமான வழுங்கல் அல்லது குறைந்த வழுங்கல் காரணமாக பெற்றாஇதம்புள்ள சந்தையில் தேசி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

ராகலா பகுதியில் இருந்து சாதகமான வழுங்கல் அல்லது குறைந்த வழுங்கல் காரணமாக பெற்றா, தம்புள்ள சந்தைகளில் பூசணிக்காயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

கலென்பிந்துநுவேவா பகுதிகளிலிருந்து சாதகமான வழுங்கல் அல்லது குறைந்த வழுங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் கத்தரி விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

குலியபிட்டிய, குருநாகல் மற்றும் மெல்சிரிபுரா பகுதிகளில் இருந்து சாதகமான வழுங்கல் அல்லது குறைந்த வழுங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் தேங்காயின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

நுவரலியா, மாத்தளை மற்றும் சிகிரியா தம்புள்ளையை அண்டிய பகுதிகளில் இருந்து குறைந்த வழுங்கல் அல்லது சாதகமான வழுங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நாரஹன்பிடா சந்தைகளில் தக்காளியின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

பாகிஸ்தானில் இருந்து குறைந்த மற்றும் உயர்தர வகை பெரிய வெங்காயம் கிடைப்பதால் இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

தெல்டெனியா பகுதிகளில் இருந்து சாதகமான வழுங்கல் அல்லது குறைந்த வழுங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் உள்ளூர் கோவா விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

யாழ்ப்பாணம், வெலிமட பகுதிகளிலிருந்து சாதகமான வழுங்கல் அல்லது குறைந்த வழுங்கல் காரணமாக தம்புள்ள மற்றும் நரஹன்பிடா சந்தைகளில் உள்ளூர் உருளைக்கிழங்கு விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்டது.

### Pettah சந்தை மொத்த விலைகள்

| | 01.03.2021 | 02.03.2021 | 03.03.2021 | 04.03.2021 | 05.03.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 115 | 155 | [illegible] | 130 | [illegible] |
| கேரட் | 150 | 140 | [illegible] | 110 | [illegible] |
| கோவா | 113 | 120 | [illegible] | 100 | [illegible] |
| தக்காளி | 213 | 220 | [illegible] | 180 | [illegible] |
| கத்திரிக்காய் | 40 | 50 | [illegible] | 50 | [illegible] |
| பூசணி | 80 | 85 | [illegible] | 80 | [illegible] |
| புடலங்காய் | 70 | 80 | [illegible] | 65 | [illegible] |
| பச்சை மிளகாய் | 265 | 243 | [illegible] | 175 | [illegible] |
| தேசி | [illegible] | [illegible] | [illegible] | 70 | [illegible] |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | 300 | 300 | [illegible] | 200 | [illegible] |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 270 | 220 | [illegible] | 175 | [illegible] |
| பெரிய வெங்காயம் (உள்ளூர்) | | | | | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 147 | 125 | [illegible] | 110 | [illegible] |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | 128 | 135 | [illegible] | 135 | [illegible] |
| உருளைக்கிழங்கு (இறக்குமதி) | 100 | 148 | [illegible] | 105 | [illegible] |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | 487 | 487 | [illegible] | 475 | [illegible] |
| தேங்காய் (சராசரி) | | | | | |

### தம்புள்ள சந்தை மொத்த விலைகள்

| | 01.03.2021 | 02.03.2021 | 03.03.2021 | 04.03.2021 | 05.03.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 125 | 83 | 135 | 155 | 125 |
| கேரட் | 155 | 125 | 145 | 155 | 165 |
| கோவா | 88 | 78 | 115 | 115 | 115 |
| தக்காளி | 155 | 135 | 155 | 155 | 175 |
| கத்திரிக்காய் | 43 | 33 | 40 | 38 | 40 |
| பூசணி | 85 | 78 | 95 | 95 | 95 |
| புடலங்காய் | 75 | | 68 | 80 | 75 |
| பச்சை மிளகாய் | 195 | 175 | 145 | 195 | 215 |
| தேசி | 75 | 85 | 75 | 115 | 75 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | | 165 | 155 | 135 | 120 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 193 | 178 | 140 | 158 | 168 |
| பெரிய வெங்காயம் (உள்ளூர்) | | | | | |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 163 | 148 | 98 | 110 | 88 |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | | 98 | 108 | 108 | 108 |
| உலர்ந்த மிளகாய் (இறக்குமதி) | | | | 448 | 508 |
| தேங்காய் (சராசரி) | 79 | 79 | 81 | 85 | 76 |

### தம்புள்ள சந்தை சில்லறை விலைகள்

| | 01.03.2021 | 02.03.2021 | 03.03.2021 | 04.03.2021 | 05.03.2021 |
|---|---|---|---|---|---|
| போஞ்சி | 145 | 103 | 155 | 175 | 145 |
| கேரட் | 175 | 145 | 165 | 175 | 185 |
| கோவா | 108 | 98 | 135 | 135 | 135 |
| தக்காளி | 175 | 155 | 175 | 175 | 195 |
| கத்திரிக்காய் | 63 | 53 | 60 | 58 | 60 |
| பூசணி | 105 | 98 | 115 | 115 | 115 |
| புடலங்காய் | 95 | | 88 | 100 | 95 |
| பச்சை மிளகாய் | 215 | 195 | 165 | 215 | 235 |
| தேசி | 95 | 105 | 95 | 135 | 95 |
| சின்ன வெங்காயம் (உள்ளூர்) | | 175 | 165 | 145 | 130 |
| சின்ன வெங்காயம் (இறக்குமதி) | 203 | 188 | 150 | 168 | 178 |
| பெரிய வெங்காயம் (இறக்குமதி) | 173 | 158 | | | |
| உருளைக்கிழங்கு (உள்ளூர்) | | 108 | 108 | 118 | 118 |
| தேங்காய் (சராசரி) | 84 | 84 | 86 | 90 | 81 |

### தம்புள்ள சந்தை பழங்கள் மொத்த விலைகள்

| பழங்கள் | 01.03.2021 | 02.03.2021 | 03.03.2021 | 04.03.2021 | 05.03.2021 |
|---|---|---|---|---|---|
| வாழைப்பழம் | 48 | 43 | 58 | 55 | 63 |
| பப்பாசி | 48 | 38 | 38 | 65 | 75 |
| அன்னாசி | 85 | 70 | 75 | 95 | 105 |
| ஆப்பிள் (இறக்குமதி) | 44 | 44 | 44 | 44 | 44 |
| ஆரஞ்சு (இறக்குமதி) | 55 | 55 | 55 | 55 | 55 |

### தம்புள்ள சந்தை பழங்கள் சில்லறை விலைகள்

| பழங்கள் | 01.03.2021 | 02.03.2021 | 03.03.2021 | 04.03.2021 | 05.03.2021 |
|---|---|---|---|---|---|
| வாழைப்பழம் | 68 | 63 | 78 | 75 | 83 |
| பப்பாசி | 68 | 58 | 58 | 85 | 95 |
| அன்னாசி | 105 | 90 | 95 | 115 | 125 |



ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# மைத்திரிபாலவைச் சிறைக்குள் தள்ள வேண்டுமானால் உண்மையான சூத்திரதாரிகள் தூக்கிலிடப்படவேண்டும்

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிக்கை

உயிர்த்தஞாயிறுதினத்தாக்குதலைத் தடுக்கத் தவறியமைக்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறையில் அடைக்கப்பட வேண்டுமானால் அந்தத் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகள் தூக்கு மேடையில் பகிரங்கமாக ஏற்றப்பட வேண்டும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

எந்தவொரு ஊடகவியலாளரை அல்லது எதிரியைக் கொல்லாத ஒரே இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாத்திரமே. அவர் எவரையும் காணாமல் ஆக்கவோ அல்லது எந்த அமைப்புக்கும் தீ வைக்கவோ அல்லது தன்னைக் கேலி செய்த எவருக்கும் பதிலடி கொடுக்கவோ இல்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைக் குண்டர்கள், போதைப்பொருள் விற்பனையாளர்கள், பாலியல் வல்லுறவாளர்கள், மோசடிக்காரர்கள் மற்றும் பயங்கரவாதிகளிடமிருந்து விடுவித்தவர் மைத்திரிபால சிறிசேனவே.

அதேபோல், பேராசிரியர் விஸ்வ வர்ணபால, பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாச மற்றும் கலாநிதி சுரேன் ராகவன் போன்றவர்களைத் தலைமைப் பதவிகளுக்கு நியமித்தவரும் அவரே - என்றுள்ளது.

## சர்வதேச தைரியம் மிக்க பெண்கள்:
# அமெரிக்காவின் விருதுப் பட்டியலில் இலங்கை சட்டத்தரணி ரனிதா தெரிவு



இலங்கையின் சட்டத்தரணியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான ரனிதா ஞானராஜா, அமெரிக்க இராஜாங்க செயலாளரினால் வழங்கப்படும் இந்த ஆண்டுக்கான 'சர்வதேச தைரியம் மிக்க பெண்கள்' விருதுப் பட்டியலில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 8ஆம் திகதி மெய்நிகர் தொழில்நுட்பத்தினூடாக நடைபெறவுள்ள இந்த விருதுவழங்கும் விழாவில் அமெரிக்காவின் முதல் பெண்மணி ஜில் பைடன் தெரிவு செய்யப்பட்ட பெண்களின் சாதனைகளை அங்கீகரித்து உரையாற்றவுள்ளார்.

உலகெங்கிலும் பெண்களின் அமைதி, நீதி, மனித உரிமைகள், பால்நிலை சமத்துவம், வலுவூட்டல் போன்றவற்றுக்காக போராட்டத்தில் தனித்துவமாக அபாயத்தையும் பொருட்படுத்தாமல் தைரியத்தையும் தலைமைத்துவத்தையும் வெளிப்படுத்திய பெண்களை கௌரவிக்கும் விதமாக இந்த விருது வழங்கப்படுகின்றது.

ரனிதா ஞானராஜா, அச்சுறுத்தல் மற்றும் சவால்களுக்கு மத்தியில் நாட்டில் ஒதுக்கப்பட்ட மற்றும் பாதிப்புகளை எதிர் நோக்கும் சமூகங்களின் உரிமைகளுக் காக தொடர்ந்து போராடியவர் என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கையின் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் குற்றங்களின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு இலவச சட்ட உதவி மற்றும் தொடர்புடைய சேவைகளை வழங்குவதன் மூலம் பல ஆண்டுகளாக கைதிகளின் நீதிக்காக ரனிதா போராடிவருவதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தனிப்பட்ட முறையில் போரினால் பாதிக்கப்பட்ட இவர், பாதிக்கப்பட்டவர்களுடன் பணியாற்றிய விரிவான அனுபவத்தின் அடிப்படையில், அவர்களுக்கான நீதியையும் பொறுப்புக்கூறலையும் பெற்றுக்கொடுப்பதில் ஆர்வத்தையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தியுள்ளார் எனவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது.

இதற்கமைய 15 ஆவது ஆண்டாக வழங்கப்படும் 'சர்வதேச தைரியம் மிக்க பெண்கள்' விருதுக்கு சட்டத்தரணி ரனிதா ஞானராஜா தெரிவாகியுள்ளார்.

2007ஆம் ஆண்டு முதல் இதுவரை 75 நாடுகளைச் சேர்ந்த 155 பெண்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிபுணர் குழு கண்துடைப்பு நாடகம்; தெரிவுக்குழுவே அமையவேண்டும்

## சஜித் அணி வலியுறுத்து



புதிய அரசமைப்பை இயற்றுவதற்கான நிபுணர் குழு என்பது கண்துடைப்பு நாடகம். எனவே, இந்த விவகாரத்தைக் கையாள்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைக்கவேண்டும்.

- இவ்வாறு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பியே அரசிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புதிய அரசமைப்பு தொடர்பில் யோசனைகளை முன்வைக்குமாறு அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்த விவகாரத்தைக் கையாளும் நிபுணர்கள் குழுவில் அரசுக்கு சார்பான சட்டத்தரணிகளே இடம்பெற்றுள்ளனர். இப்படியான குழுவின் முன்னால் யோசனை முன்வைத்து தமது தரப்புக்கு பழக்கமில்லை என்று எமது சட்டத்தரணிகள் தெளிவாக எடுத்துரைத்தனர்.

ஒன்று, நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் முழு நாடாளுமன்றத்தையும் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றி அதன் ஊடாக புதிய அரசமைப்பை இயற்றுவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். பல தரப்பு கலந்துரையாடல்களை நடத்தி, உரிய தீர்வை எட்டுவதற்கு இதுவே பொருத்தமான களமாக அமையும்.

அதேவேளை, அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து அரச தரப்புக்குள் ஒருமித்த நிலைப்பாடு இல்லை என நிபுணர்கள் குழுவால், எமது சட்டத்தரணிகள் குழாமுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்பமே குழப்பமாகவும், அரசுக்குள் முரண்பாடும் உருவாகியுள்ளது. இந்தநிலையில், எப்படி நாம் யோசனைகளை முன்வைப்பது. இது கண்துடைப்பு நாடகமாகும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் அரசுக்குத் தோல்வி உறுதி. எனவே, புதிய அரசமைப்பைக் காரணம் காட்டி தேர்தலை இழுத்தடிப்பதே அரசின் நோக்கம். - என்றார்.

# அரசிலிருந்து வெளியேறும் தீர்மானம் இன்னும் இல்லை

## மைத்திரி கருத்து



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசிலிருந்து வெளியேறும் தீர்மானத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்னமும் எடுக்கவில்லை.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்தி ரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசு பல கட்சிகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டது. அதில் எமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதான பங்காளிக் கட்சியாக இருக்கின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைய எமது கட்சி முழுமையான பங்களிப்பை வழங்கியிருந்தது. அதேபோல், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியடையவும் எமது கட்சியே பிரதான காரணம்.

ஆனால், அரசுக்குள் இருக்கும் சிலர் இதை மறந்து செயற்படுகின்றனர். அவர்கள் எங்களை வேண்டுமென்றே தூற்றுகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, கடந்த காலங்களில் எத்தனையோ சவால்களைக் கடந்து வந்தது. எனவே, தற்போதைய விமர்சனங்களைக் கண்டு எமது கட்சி பலம் இழக்காது.

அரசிலிருந்து வெளியேறும் தீர்மானத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்னமும் எடுக்கவில்லை. அரசுடன் இணைந்து பயணிக்கவே விரும்புகின்றோம். ஆனால், அரசுக்குள் இருக்கும் சில விஷக்கிருமிகள் அப்புறப்படுத்த வேண்டும் என்பது எமது பணிவான கோரிக்கை - என்றார்.

# பழிவாங்கும் வகையில் விசாரணை அறிக்கை!

## மைத்திரி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச். 06

இலங்கை அரசியலில் இருந்து என்னை ஓரங்கட்டும் வகையில் - பழிவாங்கும் வகையில் திட்டமிட்டு என்மீது அநாவசியமான - பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் விசாரணை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈஸ்டர் தாக்குதல் விசாரணை அறிக்கையை அடியோடு நிராகரிக்கின்றேன். உண்மைத்தகவல்கள் அதில் மறைக்கப்பட்டுள்ளன.

எனது ஆட்சியில் இந்தத் தாக்குதல் நடைபெற்றபடியால் என் மீது திட்டமிட்டு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதல் தொடர்பில் முன்னரே நான் அறிந்திருக்கவில்லை. அதே வேளை, இந்தத் தாக்குதல் நடக்கும்போது நான் நாட்டிலும் இருக்கவில்லை.

எனினும், தாக்குதல் சம்பவத்தை அறிந்தவுடன் உடனே நாடு திரும்பி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருந்தேன். தாக்குதலின் எதிரொலியாக இன ரீதியில் - மத ரீதியில் அரங்கேறக் காத்திருந்த வன்முறைகளைத் தடுத்திருந்தேன்.

விசாரணை ஆணைக்குழு முன் நடந்த உண்மைச் சம்பவங்களைத் தெரிவித்திருந்தேன். ஆனால், விசாரணை அறிக்கை அரசியல் ரீதியில் என்னைப் பழிவாங்கும் வகையில் வெளி வந்துள்ளது. எனினும், எதற்கும் நான் அஞ்ச வேமாட்டேன். நான் பொறுமையுடன் இருக்கின்றேன்.

ஈஸ்டர் தாக்குதல் விசாரணை அறிக்கையை பல அரசியல் கட்சியினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் நிராகரித்துள்ளனர். - என்றார்.



# மிகவும் ஆறுதலளிக்கும் உண்மை!!

தொகுப்பு :
- ப்ரியமதா பயஸ் -

கடைப்பிடிக்க வேண்டிய அறங்கள் என்று ஒரு பட்டியலிட்டுக்கொண்டால் அதில் உண்மை பேசுவதுதான் முதலிடம் பெறும் என்பது பொதுக்கருத்தாக இருக்கிறது.

ஆனால் அறமன்றி வேறொன்றும் பேசியறியாத வள்ளுவனுக்கு அறங்களின் பட்டியல் வரிசை முறையில் மாற்றுக்கருத்து இருப்பதாகத் தெரிகிறது.

வள்ளுவனிடம் ஒருவன் கேட்டான்: கடைப்பிடிக்கவேண்டியவை எவை என்பதைக் குறித்து நீங்கள் ஒரு மிக நீண்ட பட்டியல் தருகிறீர்கள். இவ்வளவையும் என் வாழ்நாளில் கடைப்பிடிக்க முடியும் என்று நான் நம்பவில்லை. எனவே என்னைப்போன்றதோர் எளிய மனிதன் கடைப்பிடிக்கத்தக்க வகையில் ஒன்று மட்டும் சொல்லுங்கள்; நான் அதைக் கடைப்பிடிக்கிறேன்.வள்ளுவன் கேட்டான்: பல கடைப்பிடிகள் கொண்ட நீண்ட பட்டியலை ஒன்றே ஒன்றுக்குச் சுருக்குவது மிகவும் கடினம். வேண்டுமானால் ஒன்று செய்கிறேன் இரண்டாகச் சுருக்கித் தருகிறேன். குற்றமில்லையே?

வந்தவனுக்குச் சங்கடமாகப் போய்விட்டது. வள்ளுவனை நம்பி வந்துவிட்டான். முடியாது என்று சொல்லிவிட்டுத் திரும்பிப் போக அவன் நெஞ்சு இடங்கொடுக்கவில்லை. அவன் சொன்னான், வேறு வழியில்லை என்றால் அப்படிச் செய்யுங்கள் என்விருப்பத்திற்கு ஒன்று, உங்கள் விருப்பத்திற்கு ஒன்று என்று வைத்துக்கொள்கிறேன்!

அறம் சார்ந்து தான் சொன்ன கடைப்பிடிகளை இரண்டாகச் சுருக்கி வள்ளுவன் சொன்னான்:

**ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்**
**பின்சாரப் பொய்யாமை நன்று. (323)**

நூலோர் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும், எல்லோர்க்கும் உரியதாய்த் தன்னிகரின்றித் தனித்து நிற்கும் அறம் கொல்லாமை; அது முதலாவதாக வைக்கத் தக்கது. அதற்கு அடுத்தபடியாக ஒன்று சொல்லலாமென்றால், அது பொய்யாமை, அதாவது உண்மை பேசுதல், உண்மையே பேசுதல்.

செய்கிறோமோ செய்யவில்லையோ? புத்தர் சொன்னார்; இயேசு சொன்னார் அரிச்சந்திரன் கதையால் அறவுணர்ச்சி விழிப்புற்று, விடுதலை தவறிக் கெட்டோரையெல்லாம் வாழ்விக்க வந்த காந்தி மகாத்மாவும் சொன்னார் மற்றுமுள்ள எல்லோரும் சொன்னார்கள்: உண்மை பேசுதலே உலக அறங்களின் மூல பண்டாரம் ஆகவே பேசுக உண்மை என்று விதந்தோதிக்கொண்டும் அறிவுறுத்திக் கொண்டும் இருந்தோமே? ஆனால், அறத்தின் போக்கைக் குறித்துத் தனி ஆய்வு செய்வதையே தன் வாழ்நாள் கடனாகக் கொண்டிருந்த வள்ளுவப் பொய்யாமொழியனின் வரிசைமுறை மாறுகிறதே?

உண்மை பேசுவதில் ஒரு சௌகரியமிருக்கிறது. உண்மை பேசுகிறவர்கள் அதை நினைவு வைத்துக்கொள்ளத் தேவையில்லை; பொய் சொல்லுகிறவர்கள் சொன்ன பொய்யை கனவிலும் நனவிலும் நினைவு வைத்துக்கொள்ளக் கடமைப்பட்டவர்கள். இல்லாவிட்டால் சிக்கிக்கொள்வார்கள்.

ஆனாலுங்கூட, உண்மை பேசுவதால் என்ன நன்மை? பொய்யர்கள் சீரும் சிறப்புமாய் இருப்பதும் மெய்யர்கள் சீரழிந்து போவதுந்தானே மனித வரலாற்றில் கண்கூடு?

அரிச்சந்திரன் அரசிழந்தான்; சோக்ரட்டீஸ் நஞ்சு பெற்றான்; இயேசுநாதர் சிலுவை பெற்றார் காந்தி துப்பாக்கிக் குண்டு பெற்றார்! நிகழ்ந்ததும் நிகழ்வதும் இவ்வாறிருக்க, எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உண்மை மட்டுமே பேசுவதென்பது தற்கொலை செய்துகொள்வதற்குச் சமமில்லையா? என் வாழ்வின் அழிவைத் தன் கருவில் சுமந்துகொண்டிருக்கும் உண்மையை நான் ஏன் பேசவேண்டும்?

எளிய மனிதர்களுக்கும் புரிகிற இந்த உண்மை வள்ளுவப் பேராசானுக்குப் புரியாமலா இருக்கும்? அதனால்தான் வள்ளுவன் உண்மையை இரண்டாந் தட்டுக்கு இறக்கிவிட்டுக் கொல்லாமையை முதல் தட்டுக்கு ஏற்றுகிறான்.

மனமிருக்கிற எல்லோரும் கடைப்பிடிக்கத்தக்க அறம் கொல்லாமை. அதைச் செய்வதால் செய்கிறவனுக்கு நன்மை மட்டுமே வருகிறது நன்மை வருகிறதோ இல்லையோ தீமை நிச்சயமாக வராது.

அப்படியானால், உண்மை பேசுவது வள்ளுவனுக்குப் இரண்டாம்பட்சமானதா?

உண்மையைப் பேசுவதுதான் வள்ளுவனுக்கு முதற்பட்சமானது. ஆகவேதான் அவன்

**பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று (297)**

**யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்**
**வாய்மையின் நல்ல பிற (300) என்கிறான்.**

வாய்மை அவனுக்கு மிகவும் உகந்த அறம். தன்னையே சாட்சியாக வைத்து, எனக்குத் தெரிய, என்று ஒரு முன்னீடு போட்டுக்கொண்டு வள்ளுவன் உலகத்திற்குச் சொன்ன அறம் வாய்மைதான்.

ஆனால் அது எல்லோருக்கும் உகந்ததா? எல்லோரும் எளிதாக உண்மை பேசிவிட முடிகிறதா?

உண்மை பேசுவது உன்னதமானது. ஆனால் உண்மையை எந்த இடத்தில் பேசவேண்டும் என்பதைக் குறித்த ஓர்மை பேசுகிறவனுக்கு இருக்க வேண்டும் என்பது வள்ளுவக் கருத்து. எண்ணுவதையெல்லாம் எண்ணியபடியே பேசிவிடுவதென்பதும் செய்துவிடுவதென்பதும் உண்மையாகாது.

அப்படியானால், உண்மை என்பதென்ன? உள்ளது எதுவோ அதுதான் உண்மை. ஆனால், உலகியலில், ஒரு காலத்தில் உள்ளது மற்றொரு காலத்தில் இருக்காது; ஓரிடத்தில் உள்ளது மற்றோரிடத்தில் இருக்காது; ஒருவருக்கு உண்மையாக உள்ளது மற்றொருவருக்கு உண்மையாக இருக்காது. உலகியல் உண்மை ஒரு தன்மை உடையதன்று! காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம், ஆளுக்கு ஆள் அதன் நிறம் மாறும்.

உலக வாழ்வில் நாம் உண்மை என்று கருதுவன அனைத்தும் சார்புடையன. ஒரு சார்பில் உண்மையாக இருக்கிறவை மறுசார்பில் பொய்யாக இருக்கின்றன.

பாட்டன் காலத்தில் உண்மையாக இருந்த ஒன்று பெயரன் காலத்தில் பொய்யாகிப் போயிருக்கலாம். ஆத்திகர்களுக்குக் கடவுள் உண்மை. நாத்திகர்களுக்குக் கடவுள் பொய்.

தரப்புகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு நிற்கிற இரு சார்பினரும் தாங்கள் கருதுவதே உண்மையென்றும் மற்றவர்கள் கருதுவது பொய்யென்றும் நம்புகிறார்கள் தத்தம் உண்மைகளை நிலைநாட்டுவதற்குச் சண்டையிட்டுக் கொள்கிறார்கள்.

இவர்கள் இரண்டு பேரின் நம்பிக்கைக்கும் நடுவில் இருக்கிறது உண்மை. அது பேரறியாத பெருஞ்சுடர். விளம்புகிறவர்கள் அனைவரும் அதன் வேர் அறியாமலே விளம்புகிறார்கள்.

எனவே உண்மை என்பது, சார்புநிலை உண்மை, சார்பற்ற, மெய்யான உண்மை என்று இரண்டாகிறது. உலகியலில், நாம் சிலவற்றை உண்மையென்று பேசலாம் பொய்யென்று பேசலாம் சிலவற்றைப் பேசாமலேயும் விட்டுவிடலாம். பொருட்டில்லை. ஏனென்றால் இவையெல்லாம் சார்புநிலை உண்மைகள். ஆனால் சார்பற்ற உண்மையைக் குறித்துத் தடுமாற்றம் கொள்வது தகாது.

உண்மை பேசுவதா இல்லையா என்று தடுமாறுகிறவர்களுக்கு வருகிற ஊடாட்டமெல்லாம் உலகியலில் நாம் அன்றாடம் எதிர்கொள்கிற சார்புநிலை உண்மைகளைப் பற்றியது தானேயன்றி, சார்பற்ற மெய்யான உண்மையைப் பற்றியதன்று.

சார்பு நிலையில் அமைகிற உலகியல் உண்மைகளைப் பேசுவதும் பேசாதிருப்பதும் அவரவர் சார்பையும் தேவைகளையும் பொறுத்தது. உலகில் வாழ்கிற எல்லோரும் தங்கள் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்துக்கொள்ளவே முனைவார்கள்; ஏனென்றால் அறம் செய்வதற்கும்கூடத் தான் வாழ்ந்தாக வேண்டும் என்பது கட்டாயமாகிறது.

உலகத்தில் எல்லோரும் தாங்கள் உண்மையானவர்கள் என்று காட்டிக்கொள்ளவே விரும்புகிறார்கள். ஆகவே வாழ்வாதாரத்தைப் பாதிக்காத அளவுக்கு உண்மை பேசுவதில் யாருக்கும் எந்த ஆட்சேபணையும் இருக்கப் போவதில்லை.

உண்மை என்பது மற்றவர்கள் நம்புவதைச் சொல்வதில்லை; தான் நம்புவதைத் தனக்கு மாறுபாடில்லாமல் சொல்வது.

வள்ளுவர் சொல்வதுபோல,

**உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்.**

உண்மை பேசுவது என்பது உலகத்தின் முரண் அறுத்து வாழ்வதில்லை. தன் முரண் அறுத்து வாழ்வது. அரிச்சந்திரனும் சோக்ரட்டீஸும் இயேசுவும் காந்தியும் தன் முரண் அறுப்பதையே உண்மை பேசுவதென்று முன்வைத்தார்கள்.

கேட்காத கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்கிற வள்ளுவன் தானே ஒரு கேள்வியை எழுப்பி அதற்கு விடை சொல்லாமல் விட்டுவிட்டானே?

கேள்வி பொதுவானது; விடைகள் அவரவர்க்கானவை.

# வாழ்க்கையின் சில அனுபவங்கள்

நீங்கள் வளரும் போது கவனமாய் இருக்க வேண்டியது எதிரிகளிடம் இல்லை நண்பர்களிடம்.

எம்மை விட வேறு யாரோ கொஞ்சம் அதிகமா கஷ்டப்படுவதை பார்க்கும் போது மனசு கொஞ்சம் சந்தோஷப்படும். எமது கஷ்டம் இதுக்கு பரவாயில்லை என்று ஆறுதல்படும்.

எம் கூடவேயிருந்துட்டு எம்மை விட அதிகமா வளர்ந்துட்டால் கண்டிப்பாக மனசு அவர்களைப் பார்த்து பொறாமை படத்தான் செய்யும்.

நீங்கள் வளரும் போது கவனமாய் இருக்க வேண்டியது எதிரிகளிடம் இல்லை நண்பர்களிடம். கூடவேயிருப்பவர்கள்தான் முதுகில் குத்துவார்கள்.

எனக்கு தெரியும் இது அப்பவே நடக்கும் என்று சிலர் சொல்வார்கள் அதை அப்போதே சொல்லியிருக்க மாட்டார்கள்.

உலகத்திலேயே முதன்மையான விடயம் கிடைத்தாலுமே எமது மனது அடுத்ததை தேடி போகத்தான் செய்கிறது .

நமக்கு இது கிடைக்காதா என்று ஏங்கும் ஒன்று யாரோ ஒருவரிடம் போதும் போதும் என்கிற அளவுக்கு இருக்கும். முழுமையான வாழ்க்கை என்று இவ்வுலகில் ஒன்றுமில்லை. எல்லோரும் ஏதோ ஒரு குறையோடு தான் வாழ்கிறோம்.

எல்லாவற்றுக்கும் ஒரு முடிவிருக்கும். காதல், வாழ்க்கை, இளமை,இவற்றை இருக்கும்போதே பயன்படுத்திக்கொள்ள வேண்டும் .

வாழ்க்கை எவ்வளவு கசப்பாயிருந்தாலும் அதுவும் நமக்கு தேவைப்படத்தான் செய்கிறது.



# குருத்துவப் பணியோடு மருத்துவப் பணியையும் புரிந்த இயேசுவின் பாதையில் பணி செய்வதே மிக அவசியம்

## மன்னார் மறைமாவட்ட மடுமாதா மருத்துவ நிலைய இயக்குநர் எஸ். அன்ரன் அடிகளார் தெரிவிப்பு






மன்னார் மறைமாவட்டத்தின் கரிற்றாஸ் வாழ்வுதயத்தின் ஒரு பிரிவாக இயங்கும் உதவிக்கரம் வளாகத்தில் அமைந்துள்ள மடுமாதா மருத்துவ நிலையம் அண்மையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்ட போதே மடுமாதா மருத்துவ நிலையத்தின் இயக்குநரான செபமாலை அன்ரன் அடிகளார் தனது வரவேற்புரையில் குருத்துவப் பணியோடு மருத்துவப் பணியையும் புரிந்த ஆண்டவர் இயேசுவின் பாதையில் பணி செய்வது மிகவும் அவசியமானது என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது –

ஆயரின் ஆலோசனைக்கு அமைய இம்மருத்துவமனையை தற்போது சிறிய அளவில் ஆரம்பித்துள்ளோம். இப்பணியை முன்னெடுக்க திருச்சிலுவை கன்னியர்களின் மாகாண முதல்வி தமது திருச்சிலுவை கன்னியர்களுடன் இணைந்து எமக்கு உறுதுணையாக இருக்கின்றனர். புனித லூர்த்து அன்னையினுடைய திருவிழா, எமது ஆயரின் ஆயர்த்துவ அபிஷேகத்தின் 9ஆவது ஆண்டு நிறைவு, உலக நோயாளர் தினம் என்பவற்றை கருத்தில் கொண்டு இந்நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது என்றார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் தனது சிறப்புரையில் இயேசு ஆண்டவர் பல ஊர்களுக்குச் சென்று நோய்களைக் குணமாக்கினார். அதேபோல குணமளிப்பையும் ஆறுதலையம் கொடுக்கும் இடமாக எமது வைத்திய சாலையும் அமையும். மருதமடு அன்னையினை பாதுகாவலியாக கொண்ட எமது மருத்துவமனைக்கு வரும் அனைவருக்கும் எமது அன்னையின் பரிந்துரை நிறைவாக கிடைப்பதாக.

இம்மருத்துவமனை உருவாகக் காரணம் மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர்களுடைய சிந்தனையாகும். எமது முதல் ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஒரு காணியை வாங்கி அதில் மருத்துவமனை கட்ட ஆலோசித்தார். யுத்தம் காரணமாக அவரால் அவ்வெண்ணத்தை நிறைவேற்ற இயலவில்லை. அடுத்து எமது இரண்டாவது ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகை கத்தோலிக்க மருத்துவ நிலையம் அமைக்க வேறோரு காணியை ஒதுக்கினார். அவரது காலத்திலும் பல இடையூறுகளால் அவராலும் அப்பணியை ஆரம்பிக்க முடியவில்லை. எமது ஆன்மீகப் பணியில் குணமாக்கும் பணியும் இருக்கவேண்டும் என்கின்ற வகையில் திருச்சிலுவை கன்னியர் சபை மாகாண தலைவியுடன் கலந்துரையாடி மருத்துவப் பயிற்சி பெற்ற இரண்டு அருட்சகோதரிகளை பெற்றோம்.

கஷ்டப்படும் மக்களுக்கு உதவியாக எமது மக்களுடைய எதிர்பார்ப்புகளுக்கமைய இந்த மருத்துவமனை அமையும் என எதிர்பார்க்கின்றோம். இலாப நோக்கம் அற்றதாகவும் மக்களுக்கு உதவும் விதத்திலும் இச்சேவை அமையும். இந்நிலையம் உருவாகுவதற்கு உதவிய வெளிநாட்டு ஆயர்கள், எம் மறைமாவட்டக் குருக்கள், ஏனைய நல்லுள்ளங்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம். – என்றார்.

இந்நிகழ்வில் மறைமாவட்ட குருமுதல்வர் அ. விக்ரர் சோசை அடிகளார், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கௌரவ திருமதி ஸ்ரான்லி டி மெல், பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி வினோதன், சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி திரு றோய் பீரிஸ், மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க வைத்திய சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி றெனி, மன்னார் மாவட்ட பிரதம பொலிஸ் அதிகாரி, மன்னார் நகரசபைத் தலைவர் சார்பில் அவரது பிரதிநிதி, திருச்சிலுவை கன்னியர் மாகாண முதல்வியின் ஆலோசகர் அருட்சகோதரி ஜெரால்டின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
- ஊடக விரிவுரையாளர்

## இறைநம்பிக்கையை கொண்டு வரும் ஈராக் பயணம் என்கிறார் திருத்தந்தை

05 மார்ச் 2021 அன்று ஈராக் நாட்டை நோக்கித் தன் திருத்தூதுப் பயணத்தை தொடங்கி உள்ள நிலையில் ஈராக் நாட்டு மக்களுக்கென காணொலிச் செய்தியொன்றை வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மிகப் பழைமையானதாகவும் நாகரிகத்தின் மிக உயர்ந்த தொட்டிலாகவும் இருக் கும் இந்நாட்டிற்குச் சென்று அங்குள்ள மக்களை முகமுகமாகச் சந்திக்கத் தாம் ஆவல் கொண்டுள்ளார் என அதில் தெரிவித்துள்ளார்.

யூதம் – இஸ்லாம் – கிறிஸ்தவம் என்ற மூன்று மதங்களின் தந்தையாகிய ஆபிரகாமின் அடையாளத்துடன் ஈராக் நாட்டிற்கு வரும் தான் ஏனைய மதங்களின் உடன்பிறப்புகளோடு இணைந்து நடக்கவும் செபிக்கவும் அமைதியின் திருப்பயணியாக உடன் பிறந்த நிலையைத் தேடி வருகிறார் எனத் தன் செய்தியில் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

பல்வேறு துயர்களின் மத்தியிலும் விசுவாசத்திற்கு சான்றாக தொடர்ந்து வாழும் ஈராக் கிறிஸ்தவர்கள் குறித்து தான் பெருமைப்படுகிறார் எனத் தன் செய்தியில் கூறும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வீடுகள் – கோவில்கள் அனைத்தும் பல்வேறு வழிகளில் சேதமடைந்துள்ள ஈராக் நாட்டிற்கும் மத்திய கிழக்குப் பகுதிக்கும் அகில உலக திரு அவையின் பாசமிகு கரிசனையை தான் தாங்கி வருகிறார் எனவும் தன் செய்தியில் கூறியுள்ளார்.

தீமைகள் பெருகிவரும் சூழல்களில், அவற்றைக் கண்டு, நம்பிக்கையிழக்காமல், அனைத்தையும் விட்டுவிட்டு செல்ல வேண்டிய நிலையிலும், இறைவன் மீது நம்பிக்கை கொண்டு தொடர்ந்து சென்ற ஆபிரகாம் போல் வானத்தில் காணும் விண்மீன்களில் நமக்குரிய வாக்குறுதிகளைக் காண்போம் என ஈராக் கிறிஸ்தவர்களை நோக்கி தன் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார், திருத்தந்தை.

இந்நாட்டில் பல்வேறு துன்பங்களை அடைந்தாலும் நொறுங்கிப்போகாமல் இருக்கும் கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், யாசிதி இனத்தவர் ஆகிய அனைவருக்கும் இறைவனின் நம்பிக்கையைத் தாங்கி வருவதாகக் கூறுகிறது திருத்தந்தையின் செய்தி.

ஆபிரகாமின் பயணத்தையும் நினைவில் கொண்டவர்களாக இந்த பெருந்தொற்று காலத்தில் ஒருவருக்கொருவர் உதவிசெய்து, உடன்பிறந்த நிலையை பலப்படுத்தி அமைதியின் வருங்காலத்தை கட்டியெழுப்புவோம் எனற விண்ணப்பத்துடன் அது நிறைவு பெறுகிறது.

## வல்லவர்கள் வேண்டாம் நல்லவர்கள்தான் வேண்டும்

### தவக்கால சுற்றுமடலில் யாழ் ஆயர்



நாம் நமது வாழ்வில் நல்லவற்றைச் செய்பவர்களாக வாழ வேண்டும். நன்மைத்தனங்கள் புரிபவர்களாக இருக்க வேண்டும். இதையே நான் ‘வல்லவர்கள் நமக்கு வேண்டாம் – நல்லவர்கள்தான் வேண்டும்’ என அடிக்கடி கூறி வருகிறேன் என யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை 2021ஆம் ஆண்டிற்கான தவக்கால சுற்றுமடலில் தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டை புனித சூசையப்பர் ஆண்டாகத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பிரகடனப்படுத்தியமையை நினைவூட்டும் யாழ் ஆயர், புனித சூசையப்பர் தமது வாழ்க்கையில் எளிமை, தவம், தாழ்மை, இறை சித்தத்திற்குக் கீழ்படிதல் முதலான நற்பண்புகளைக் கொண்டிருந்தார். அத்தகைய அவரது நிலை இறைமகன் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகும் பேறு பெறுவதற்குக் காரணமாக அமைந்தது என்றார்.

நல்லதைச் செய்யும் போது நாம் நன்மைக்குள் வாழ்கிறோம். அச்சம் நிறைந்த வாழ்வுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பழைமையான சடங்குகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் விடை கொடுத்து புதிய அர்த்தப்படுத்துதல்களோடு தவக்காலத்தில் நல்ல செப தப பகிர்வு முயற்சிகளில் ஈடுபடுவோம்.– எனத் தனது 2021ஆம் ஆண்டிற்கான தவக்கால சுற்றுமடலை நிறைவு செய்கிறார் யாழ் ஆயர்.

## வரலாற்றில் முதல் முறையாக ஈராக் நாட்டுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் திருத்தூதுப் பயணம்




இறைவனுக்கு விருப்பமானால் மார்ச் 5,6, 7ஆம் திகதிகளில் நான் ஈராக் நாட்டிற்கு ஒரு திருப்பயணியாக மூன்று நாள்கள் செல்கிறேன். இந்தப் பயணம் நல்ல முறையில் நடந்து தகுந்த பலன்களை வழங்க இறைவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள் என திருத்தந்தை பிரான்சிஸ் 03 மார்ச் 2021 அன்று வேண்டினார்.

திருத்தந்தை பிரான்சிஸ் தன் ஈராக் திருத்தூதுப் பயணத்தைப் பற்றி குறிப்பிட்டுப் பேசுகையில் –

தொடக்கத்தில் ஆபிரகாம் வாழ்ந்த நாட்டில் வேரூன்றி வளர்ந்துள்ள திருஅவையின் மக்களை நான் சந்திக்கச் செல்கிறேன். மிக நீண்ட காலமாகத் துன்பங்களைத் தாங்கி கிறிஸ்தவ மறையின் சாட்சிகளாக வாழ்ந்துவரும் ஈராக் மக்களைச் சந்திப்பதை ஓர் அரிய வாய்ப்பாகக் கருதுகிறேன். 2000ஆம் ஆண்டு கத்தோலிக்கத் திருஅவையில் பெரும் யூபிலி ஆண்டு சிறப்பிக்கப்படுவதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்னதாகத் திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் அவர்கள் ஈராக் நாட்டிற்குச் செல்ல விழைந்தார். ஆனால் திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் அவர்கள் அந்நாட்டிற்குச் செல்லத் திட்டமிட்டு அந்தப் பயணம் இறுதி நேரத்தில் நிறுத்தப்பட்டது. அந்நாட்டு மக்களை இரண்டு முறை ஏமாற்றம் அடையச் செய்வது சரியல்ல. – என்றார்.

விவிலியத்தில் இறைவனின் வார்த்தைக்கு முதன்முதலாக செவிமடுத்த ஆபிரகாம் வாழ்ந்த கல்தேயரின் ஊர் என்ற நகருக்கு நான் செல்ல விழைகிறேன் என்று திருத்தந்தை புனித 2ஆம் யோவான் பவுல் அவர்கள் தன் விருப்பத்தை வெளியிட்டிருந்தாலும் இறுதி நேரத்தில் அவரது பயணம் நிறுத்தப்பட்டது. விவிலியத்துடன் தொடர்புடைய பல்வேறு நாடுகளின் ஒருங்கிணைந்த பகுதி புனித பூமி என்று கருதப்படுகிறது. இந்த நாடுகளில் இதுவரை ஈராக் நாட்டிற்கு மட்டும் திருத்தந்தையர் யாரும் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## காணி தேவை

யாழ் நகரில் இருந்து மருதனார் மடத்திற்கு இடைப்பட்டதாக K.K.S வீதியில் வீதியோரத்தை அண்மித்தாக காணி தேவை.
தொடர்புகளுக்கு - 076 339 8819
077 951 4699

வன்னேரி, கண்டாவளையிலும், வயல் காணி குத்தகைக்குத் தேவை, வேறுவயல்களும் குத்தகைக்கு கொடுப்பவர்களும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு - 077 857 8528

## வேலை வாய்ப்பு

O/L வர்த்தகப் பிரிவு பெண் வேலைக்கு தேவை (வேலை பழக விரும்பும் பெண்களும் தொடர்பு கொள்ளலாம்)
தொடர்புகளுக்கு:-077 552 7099

கணினி திருத்துவதற்கு வேலை பழக விரும்பும் ஆண், பெண், இருபாலாரும் தேவை.
தொடர்புகளுக்கு:- 077 914 7472

யாழ்.நகரில் இயங்கி வரும் பிரபல நிறுவனத்திற்கு விற்பனை பிரதிநிதி தேவை.
தொடர்புகளுக்கு:-076 423 0066

வீட்டு பணியாட்கள் தேவை 20 - 55 வயதிற்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் தொடர்புகொள்ளலாம்.
தொடர்புகளுக்கு - 077 435 0737

தினசரி பத்திரிகைகள் வீடுகளுக்கு விநியோகிகக்கடும்.
தொடர்புகளுக்கு - 077 292 6316

Laptop உதிரிபாகங்கள் பெற்று கொள்ளலாம் பாவித்த Laptop வாங்கப்படும், விற்கப்படும்.
தொடர்புகளுக்கு - 077 914 7472

கோயில் மாலை, கல்யாணமாலை, கல்யாண மாலை நச்சுரல், ஆண்டாள் மாலை, கொண்டை மாலை, மல்லிகை சரம், சடை நாகம் கொழும்பு மல்லிகை மாலை என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு - 077 210 0014
076 834 4381

## கல்வி

மிருதங்கம், வயலின், கிட்டார், ஓகன், வாய் பாட்டு கற்க விரும் பும் மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு - 077 022 9400

## பழுது பார்த்து கொடுக்கப்படும்

சகல வகையான குளிர்சாதன பெட்டிகளும் பழுது பார்த்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு - 077 654 8613

## சேவைகள்

சி.சி.ரீ.வி கமரா பொருத்துதல், பராமரித்தல் மற்றும் முதற்தர கமராக்களை வாங்குவதற்கு அணுகவும்.
தொடர்புகளுக்கு - 077 473 6057

உங்கள் அடகு நகைகளை மீட்க உதவுவோம். பழைய நகைகள் கூடிய விலையில் வாங்கப்படும்.
தொடர்புகளுக்கு - 021 222 2552

பெண்களுக்கான திருமண வைபவ சாறி பிளவுஸ்களுக்கு ஆரிவேர்க் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு - 077 332 1937
076 610 9770

பழைய நகைகள் கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்படும், தகுந்த ஆவணங்களுடன் வருகை தரவும்.
தொடர்புகளுக்கு:- 076 804 6048
திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி

## வீடு வாடகைக்கு

யாழ் நகர பகுதியில்பத்து அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு - 077 007 2433

## கடை வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதிக்கும் கோவில் வீதி சந்திக்கும் இடையில் (10x12 SQ ft) கடை வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-077 020 7073

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 077 477 9443
076 141 9299

மானிப்பாய் வீதி ஐந்து சந்தியில் கடை தொகுதி வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு - 077 354 7789

கோப்பாய் (யாழ் பருத்தித் துறை வீதி நாவலர் பாடசாலை அருகில்) ஆசிரியர் கலா சாலைக்கு அண்மையில் பெண்களுக்கான தனி அறைகள் வாடகைக்கு உண்டு (பெண்களுக்கு மட்டும்)
தொடர்புகளுக்கு - 070 564 0975

வாகன தரப்பிட வசதிகளுடன் 5 அறையும் 3 குளியலறையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (மாதம் 50,000/= முற்பணம் 3, 00 000/=)

கோண்டாவில் 2பரப்பு காணியில் 8 அறைகளுடன் 3 குளியறைகளுடன் புதிய வீடுவாடகைக்குண்டு. மாத வாடகை - 30,000/= முற்பணம் 3,00,000/=

திருநெல்வேலியில், குளியல் அறை தனியாக அமைந்த 2 அறைகள் கொண்ட வீடு வாடகைக் உண்டு. மாதம் 15,000/= முற்பணம் 200,000/=

கொழும்பு வெள்ளவத்தையில் அடுக்கு மாடி குடியிருப்பில் சகல வசதிகளுடனும் கூடிய 2 அறை, 1 குளியலறை கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

யாழ் நகரில் கடை வாடகைக்கு 400 சதுரஅடி முற்பணம் 2 1/2 லட்சம், மாத வாடகை 25,000/=
யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள வீடுகள், கடைகள் விலைக்குத் தேவை.

பொரளையில் அடுக்குமாடி குடியிருப்பில் 650 SQ 2 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. பத்திரப் பதிவுகளுடன் 58 இலட்சம் ( லிப்ட் வசதி வாகனத் தரப்பிட வசதியில்லை) 25 வருட கால கட்டடம்.
தொடர்புகளுக்கு - 076 361 4997
075 504 7001

## வீடு, காணி விற்பனைக்கு

1. கோண்டாவிலில் வீடு விற்பனைக்கு 2.5 பரப்பு
2. கஸ்தூரியார் வீதி ஓரமாக கடையுடன் வீடு விற்பனைக்கு 1 பரப்பு.
3. கொடிகாமம் வீடு விற்பனைக்கு 4 பரப்பு 11.5 குழி.
4. பொன்னாலை வீதியில் கடற்கரையோரமாக காணி விற்ப னைக்கு 34 பரப்பு.
5. கே.கே.எஸ் கடற்கரையோரமாக காணி விற்பனைக்கு 7 பரப்பு.
6. முடமாவடி கோவில் வீதியோரமா.க காணி விற்பனைக்கு 1.5 பரப்பு.

**Re/max**
தொடர்புகளுக்கு - 077 566 0000

1. கல்வியக்காட்டில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. பருத்தித்துறை வீதிக்கு 550மீ தூரத்தில்.
2. கோப்பாய் 5.5 பரப்பு காணி விற்பனைக் குண்டு. பருத்திதுறை வீதிக்கு 300மீ தூரத்தில், பரப்பு 15 இலட்சம்.
3. இருபாலையில் 3 1/2 பரப்பு காணியுடன் மூன்று அறைகளைக் கொண்ட புதிய வீடு விற்பனைக் குண்டு (பருத்தித்துறை வீதிக்கு 75மீ தூரத்தில்)

தொடர்புகளுக்கு - 076 361 4997
075 504 7001

தெல்லிப்பழை ஆஸ்பத்திரி பிரதான வீதிக்கு அண்மையில் 2.5 பரப்பு காணி விற்பனைக்கு ஒரு பரப்பு 18 லட்சம்.
தொடர்புகளுக்கு 070 431 7660

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஐந்து சந்தியில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு 077 43 22836

1. செம்மணி வீதியில் நாயன்மார்க்கட்டு கேணியடியில் 18 பரப்பு காணி உண்டு.
2. பருத்தித்துறை நகருக்கு அண் மையில் தும்பனை கிழக்கு அருகில் உட்புறமாக 2 1/4 பரப்பு காணி உண்டு.
3. யாழ் பிறவுண் வீதியில் கந்தர்மடசந்திக்கு அண்மையில் 4 பரப்பு காணி உண்டு.
4. யாழ் பொஸ்கோ பாட சாலைக்கு அண்மையில் 3 பரப்பு காணியும் வீடும் உண்டு.
5. றக்காலேனில் வீடும் 8 பரப்பு காணியும் உண்டு.
6. யாழ் நல்லூர் கோயிலுக்கு அண்மையில் 5 பரப்பு காணி உண்டு.

7.யாழ் பரமேஸ்வரா சந்தி அருகாமை பலாலி வீதியில் 6 பரப்பு காணியும், சுண்டுக்குழி கொழும்புத் துறை வீதியில் வீட்டுடன் 3 பரப்பு காணியும், கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் 6 பரப்பு காணி 14" பாதையுடன் விற்பனைக் உண்டு.
தொடர்புகளுக்கு - 077 857 8528

## திருமண சேவை

யாழ் இந்து கிறிஸ்தவ ஜாதகங்கள் உண்டு.உள்நாடு வெளிநாடுகளில் உள்ளவர்கள் பொருத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு - 077 621 3832
Email: thiriChelvam1964@gmail.com

## மணமகள் தேவை

பிறந்த திகதி - 04. 01.1988, மதம் - இந்து N,நட்சத்திரம் - புனர்பூசம் 4, கி.பா - 8, சூரி/ செவ் - 6 இல், தகைமை - AL தொழில் - எலக்சரிசன் டோவா, எதிர்பார்ப்பு - ஓரளவு படித்த பெண்.

பிறந்த திகதி - 31.12.1987, மதம் - இந்து N, நட்சத்திரம் - கார்த்திகை 2, கி.பா - 45 சூரி/ செவ் - 10 இல், தகைமை - AL, தொழில் - காவல் துறை உத்தியோகத்தர், எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள்.
தொடர்புகளுக்கு - 077 197 1667

கனடாவில் வாழும் 27 வயது 2 இல் சூரியன் செவ்வாய் கேட்டை நட்சத்திர இந்து வேளாளர் மணமகளுக்கு இலங்கையில் மணமகனை எதிர்பார்க்கிறோம்.
தொடர்புகளுக்கு - 076 527 1807

## மரக் கன்றுகள் விற்பனைக்கு

1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.
தொடர்புகளுக்கு - 021 492 7778

தரமான இஞ்சி கன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு - 021 492 7778

## ஒடியல் மா தேவை

ஒடியல் மா மொத்தமாக கொள்வனவிற்கு தேவை.
தொடர்புகளுக்கு - 076 7403 814

## பனங்கிழங்கு தேவை

பனங்கிழங்கு மொத்த கொள்வனவுக்கு தேவை.
தொடர்புகளுக்கு - 076 011 7002

# மிச்செல் பச்சிலெட்டை அழைக்க அரசு தீர்மானம்!



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சிலெட்டை இலங்கைக்கு அழைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

படையினருக்கு எதி ராக மனித உரிமைகள் மீறல் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்பட்டுள்ள நிலையில் அவற்றின் உண்மை நிலையை அறிந்து கொள்வதற்காக அவர் களை அழைக்க அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது எனக் கூறினார்.

அந்தவகையில்மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சிலெட் மற்றும் மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கின்ற முக்கியமான நாடுகளின் பிரதிநிதிகளை இலங்கைக்கு விஜயம் செய்யும் படி அழைப்பு விடுக்க வுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

## வாகனம் தேவை

டி ராக்டர் பெட்டி தேவை. முச்சக்கர வாகனம் தேவை.
தொடர்புகளுக்கு 076 7403814

## வாகனம் விற்பனை

ஒட்டோக்கள் விற்பனைக்கு

| | |
|---|---|
| Bajaj 2004 2 Stroke | 5,20,000/= |
| Bajaj 2019 4 Stroke | 11,50,000/= |
| Bajaj 2006 2 Stroke | 6,50,000/= |
| Bajaj 4 Stroke 2016 | 9,50,000/= |
| Bajaj 2 Stroke 2005 | 5,50,000/= |
| TVS King 2013 | 6, 00,000/= |
| Bajaj 4 Stroke 2012 | 7,00,000/= |
| Bajaj 2 stoke 2009 | 6, 00,000/= |

தொடர்புகளுக்கு: 077 403 9609
021 221 4849

மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு
**FZS 2017 Yamaha 150cc**
**150cc Bajaj Pulsar 2018**
**Yamaha Fazer 150cc 2018**
**Ns 200cc Bajaj 2018**
**Hero Hunk 2016 150cc**
**KTM Duke 125 cc 2020**
**KTM RC 200 cc 2019**
**KTM RC 125 cc 2020**
**Bajaj 135 cc Discover**

ஓட்டோ விற்பனைக்கு
**1.Bajaj 4Stroke 2015 AB Seies**
**2.Bajaj 2 Stroke 2010 Q Series**
**3.TVS 2014**
**AA Series**
விலைகள் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்
தொடர்புகளுக்கு - 077 492 7036
077 625 2537

## மீண்டும் சீட்டிழுப்பு வெற்றிகள்

யாழ் வெற்றி முகவர் கனகலிங்கம் திலகவதி மூலம் 3.01.2021 ஜாதிய சம்பத் மூலம் 1 லட்சம், சசிரி மூலம் 1 லட்சம், 05.01.2021 மூலம் மஹஜன சம்பத் 1 லட்சமும் வெல்லப்பட்டுள்ளது.
தொடர்புகளுக்கு -கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (அன்னை நாகா பூட்சிற்றி முன்பாக) மற்றும் பஸ் நிலைய, வைரவர் கோவில் பின்புறம்).
தொ.இல. - 077 603 1723




## லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 197 1667
077 316 4796

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1989.04.11 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மிருகசீரடம் 2
கி.பா - 31 செவ் - 05 இல்
தகைமை - B.B.A தொழில் - Auditor, Dubai
எதிர்பார்ப்பு - AL ஆங்கில அறிவு AL படித்த மணமகள்.

பிறந்த திகதி - 1992.01.23 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூரம்
கி.பா - 15 செவ் - 10 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - மணமகள் தேவை.

பிறந்த திகதி -1987.03.26 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அவுட்டம் 4
கி.பா - 18 செவ்/சூரி - 9 இல்
தகைமை - AL
தொழில் - Work Permit (ITALY)
எதிர்பார்ப்பு - ஐரோப்பா PR உள்ள மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1989.05.20 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அனுசம்
கி.பா - 33 செவ் - 7 இல்
தகைமை - B.A. தொழில் - D.O அரச சேவை
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1988.11.25 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மிருகசீரிடம் 2
கி.பா - 53 செவ் - 02 இல்
தகைமை - E.Engineer
தொழில் - Company உரிமையாளர்
எதிர்பார்ப்பு - AL மேல் படித்த மணமகள்.

பிறந்த திகதி - 1988.04.07 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - கேட்டை
கி.பா - 13 செவ்/சூரி - 09 இல்
தகைமை - B.S.C. .... Engineer
தொழில் - .... Engineer சிங்கப்பூர்
எதிர்பார்ப்பு - B.sc Engineer சிங்கப்பூர், இலங்கை மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1987.12.09 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - புனர்பூசம் 4
கி.பா - 12 செவ் - 02 இல்
தகைமை - AL தொழில் - France PR
எதிர்பார்ப்பு - UK or வெளிநாடு செல்ல விரும்பும் மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1989.05.15 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தரம் 1
கி.பா - 45 செவ் - 12 இல்
தகைமை - B.sc Civil Engineer
தொழில் - Civil Engineer சிங்கப்பூர்
எதிர்பார்ப்பு - Doctor or Engineer மணமகள் தேவை.

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1992.07.13 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மூலம்
கி.பா - 42 செவ் - 05 இல்
தகைமை - B.sc Civil Eng தொழில் - அரச சேவை
எதிர்பார்ப்பு - பட்டதாரி உள்நாடு வெளிநாடு மணமகன்.

பிறந்த திகதி - 1993.01.25 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - விசாகம் 1
கி.பா - 63 செவ் - 7 இல்
தகைமை -கல்வியல் கல்லூரி தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - Doctor அரச உயர் பதவி மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1996.01.14 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - சித்திரை 3
கி.பா - 35 சூரி/செவ் - 01 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Final
எதிர்பார்ப்பு - Doctor or Engineer U.K இலங்கை மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1994.03.12 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பூரட்டாதி 3
கி.பா - 45 செவ்/சூரி - 12 இல்
தகைமை - Bsc. M.sc தொழில் - Demo கம்பனி
எதிர்பார்ப்பு - Bsc பட்டதாரி அரச சேவை மணமகன்.

பிறந்த திகதி - 1991.09.29 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ரோகினி
கி.பா - 12 சூரி/செவ் - 02 இல்
தகைமை - பட்டதாரி தொழில் - Canada PR
எதிர்பார்ப்பு - Canada மணமகன் UK, U.S.A.

பிறந்த திகதி - 1992.01.10 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பூரட்டாதி 1
கி.பா - 50 சூரி/செவ் - 1 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor or Engineer மணமகன் தேவை.

பிறந்த திகதி - 1991.10.31 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 16 சூரி/செவ்- 10 இல்
தகைமை - B.A. Economics
தொழில் -Accountant UK PR
எதிர்பார்ப்பு - UK பட்டதாரி மணமகன்.

பிறந்த திகதி - 1992.01.04 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மூலம்
கி.பா - 44 சூரி / செவ் - 12 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor or Engineer அரச உயர் பதவி மணமகன் தேவை.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர் தொலைபேசி
021 222 3000

# விவசாய போதனாசிரியர்களுக்கு வடக்கு மாகாணத்தில் நியமனம்!



விவசாயப் போதனாசிரியர்களுக்கான நியமனக்கடிதங்கள் வழுங்கும் நிகழ்வு ஆளுநர் செயலகத்தில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம செயலாளர், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர், விவசாயத்துறையின் மாகாணப் பணிப்பாளர், விவசாயத்துறை அதிகாரிகள் மற்றும் புதிதாக நியமனக் கடிதம் பெறுவோர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இங்கு கருத்துதெரிவித்த ஆளுநர் –

'விவசாய அமைச்சில் காணப்படுகின்ற நீண்டகால வெற்றிடம் இன்று நிரப்பப்படுகின்றது.' எனவும் யாழ் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களிலும் விவசாயிகளும் விவசாய நிலங்களும் அதிகமாக உள்ளன எனவும் குறிப்பிட்டார்.

மேலும் இலங்கையில் உற்பத்தி செய்யும் பொருள்களை விட இறக்குமதி செய்யும் பொருள்களின் விலை குறைவாக உள்ளது என்பதை சுட்டிக்காட்டிய ஆளுநர், அதற்குக் காரணமாக விவசாயிகள் கடைப்பிடிக்கும் உற்பத்தி முறைகள் மற்றும் பயிர்ச்செய்கை முறைகள் என்பவற்றை குறிப்பிட்டார்.

மேலும் விவசாயிகளுக்கு உற்பத்தி செலவைக் குறைத்து விஞ்ஞான தொழில்நுட்பஉதவிகளுடன் விளைச்சலை அதிகரிக்கும் வழி முறைகளை அவர்களுக்கு கொண்டுசெல்ல வேண்டும் என்பதற்காகவே இம் முறை விவசாயப் போதனாசிரியர்களாக விவசாய பட்டதாரிகளை உள்வாங்கியுள்ளோம் எனவும் கூறினார்.

அத்துடன் விவசாய பட்டதாரிகள் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட அறிவை விவசாயிகளுக்கு சரியாக பரிமாற்றப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார். மேலும் இந்த அறிவுப்பரிமாற்றத்தின் மாற்றம் அடுத்த வருட விவசாய உற்பத்திகளின் தரவுகளிலே தனித்துத்தெரியவேண்டும் எனவும் பழையன கழிதலும் புதிய புகுதலும், எனும் வசனத்திற்கு ஏற்ப புதிய விவசாய உற்பத்தி மற்றும் பயிர்ச்செய்கை முறைகளை நடைமுறைப்படுத்தி விவசாயத்திலும் விவசாயிகளின் வாழ்விலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் எனவும் குறிப்பிட்டார். மேலும் புதிதாக நியமனம் பெற்றவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

## சொர்க்கம் திருமண சேவை

**மணமகன் விபரம்**

பிறந்த திகதி -1979.11.04 மதம் - இந்து
ஜாதி - வேளாளர்
நட்சத்திரம் - பரணி 1
தொழில் - Manager (USA)
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த அழகிய பெண்.

பிறந்த திகதி - 1979.10.14 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் செவ் - 2இல்
நட்சத்திரம் - பூராட்டாதி
தொழில் - GasStation (London)
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த அழகிய பெண்.

பிறந்த திகதி - 1986.12.30 மதம் - இந்து
ஜாதி - கோவியர் நட்சத்திரம் - மூலம்
தொழில் - சொந்தத் தொழில் (கனடா)
எதிர்பார்ப்பு -இலங்கையில் படித்த அழகிய பெண்.

பிறந்த திகதி - 1986.09.04 மதம் - இந்து
ஜாதி - வேளாளர் செவ் - 2 இல்
நட்சத்திரம் - பூரம் 2
தகைமை - CMA Management
தொழில் - Director
எதிர்பார்ப்பு - படித்த அழகிய பெண்.

**மணமகள் விபரம்**

பிறந்த திகதி - 1992.12.29 மதம் - இந்து
ஜாதி - கோவியர்
நட்சத்திரம் - சதயம்
தகைமை - Dip in Food Technology
தொழில் - Quality Control Officer
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்.

பிறந்த திகதி - 1996.08.26 மதம் - இந்து
ஜாதி - வேளாளர்
செவ் - லக்கினத்தில்
நட்சத்திரம் - உத்திராடம் 1 ஆம் பாதம்
தகைமை - Computer Diploma
தொழில் - Courier Service
எதிர்பார்ப்பு - படித்த மணமகன் (5,6 வயது வித்தியாசம்)

பிறந்த திகதி - 1986.10.09 மதம் - இந்து
ஜாதி - வேளாளர்
நட்சத்திரம் - கேட்டை 4
தகைமை - B.com
தொழில் - Banker
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த மணமகன்.

பிறந்த திகதி - 1984.09.04 மதம் - இந்து
ஜாதி - வேளாளர்
நட்சத்திரம் -மூலம்
தகைமை - Msc
தொழில் - London PR
எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த மணமகன்.

102/A பருத்தித்துறை வீதி,யாழ்ப்பாணம்.
www.sorkham.com
தொடர்புக்கு - 0014166661855, 077 650 5097, 076 236 4188, 021 222 1515

## போதைப் பாவனையை கட்டுப்படுத்த கைதிகள் மூலம் விசேட நடவடிக்கை!

நாட்டின்சிறைச்சாலைகளுக்குள்போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கில் கைதிகள் அடங்கிய சிறப்புக் குழுவை நியமிப்பதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக ஒவ்வொரு சிறைச்சாலையினுள்ளும் கைதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு சிறப்பு பயற்சிகள் வழுங்கப்படும் என சிறைச்சாலை திணைக்கள ஆணையாளர் துஷார உபுல்தெனிய குறிப்பிட்டுள்ளார்.

இந்த முயற்சியானது போதைப் பழக்கத்தால் பாதிக்கப்பட்ட கைதிகளின் போதைப் பொருள் பாவனையை குறைப்பதை நோக்காக கொண்டதாகும்.

## நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கம் பெப்ரவரியில் 460 கோடி அமெரிக்க டொலர்களாக வீழ்ச்சி

கடந்த பெப்ரவரி மாத இறுதியில் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கம் 460 கோடி அமெரிக்க டொலர்களாக வீழ்ச்சியடைந்துள்ளது.

மத்திய வங்கியின் இடைக்கால மதீப்பீடுகளுக்கமைய இந்த வீழ்ச்சி கண்டறியப் பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாத இறுதியில் நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கம் 460 கோடி அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது. கடந்த வருட இறுதியில் வெளிநாட்டு ஒதுக்கமானது 560 கோடி அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது.

இந்நிலையில் வெளிநாட்டு ஒதுக்கத்தை மேம்படுத்தும் ஒரு கட்டமாக, மத்திய வங்கியால் கடந்த பெப்ரவரி மாதம், 2.8 கோடி அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்களின் பரிமாற்றங்களில் இருந்துபெற்றுக்கொண்டதாககூறப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# சர்வதேச மகளிர் தின கௌரவிப்பு நிகழ்வு

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பிரான்ஸ் தமிழ் வானொலியும் பூமணி அம்மா அறக்கட்டளையும் இணைந்து நடாத்தும் யாழ் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சேவையாற்றும் மகளிரை கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 08ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நெடுங்குளம் சந்தி, கண்டி வீதியில் அமைந்துள்ள சர்வோதய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வை யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் றோய் றொபின்சன் சோபிகா தலைமை ஏற்று நடத்துவார்.

யாழ் மாநகர சபை உறுப்பினரும், யாழ் மாவட்ட பூமணி அம்மா அறக்கட்டளை அமைப்பின் தலைவரும் லயன் கலாநிதி நா.தனேந்திரனின் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் -

பிரதம விருந்தினராக இலங்கை மகளிர் அமைப்பின் தலைவி ஸ்ரீபத்மநாதன் மிதுலாவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ் திறந்த வெளி பல்கலைக்கழக பதிவாளர் கந்தவேளும், சர்வோதய இணைப்பாளர் இ.யுகேந்திராவும், யாழ். மாவட்ட செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.பஞ்சலிங்கமும், மாவட்ட செயலக மகளிர் உத்தியோகத்தர் ந.உதயனியும் பூமணி அம்மா அறக்கட்டளை அமைப்பின் செயலாளர் டாக்டர் இ.சற்குருநாதனும் கலந்து கொண்டு யாழ் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமூக சேவையில் ஈடுபட்ட 60 மகளிருக்கு விருது வழங்கி கௌரவிக்கவுள்ளனர்.

## ஈஸ்டர் தாக்குதலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராஜபக்ஷ தெரிவித்தார்.

குருநாகலில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களுக்குத் தற்போதைய அரசு பொறுப்பேற்க வேண்டும் என்ற கூற்றுகளை நாம் நிராகரிக்கின்றோம்.

முன்னைய அரசின் பலவீனம் காரணமாகவே 2019 உயிர்த்த ஞாயிறு தினமன்று மீண்டும் குண்டுகள் வெடித்தன.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அப்போதைய அரசு தாக்குதல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என ஆணைக்குழுவின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

நல்லாட்சி அரசு 2015 இற்கு முன்னர் நடைமுறையில் இருந்த பாதுகாப்புத் திட்டத்தை பின்பற்ற தவறியமையும், தேசிய பாதுகாப்பில் தளர்வான அணுகுமுறை மற்றும் திறமையின்மையுமே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்குப் பின்னால் இருந்த முக்கிய காரணிகளாகும்.

நல்லாட்சி அரசில் இருந்தவர்கள் தற்போது அவர்களுக்குப் பொறுப்பு இல்லாதது போன்று கருத்து வெளியிடுகின்றனர். தமது ஆட்சியில் மரணதண்டனையைப் பெற்றுக்கொடுப்பதாகவும் அவர்கள் கூறுகின்றார்கள். ஒரு அரசால் எவ்வாறு மரணதண்டனை வழங்க முடியும்? அதனைத் தீர்மானிக்க வேண்டியது நீதிமன்றமே.

2019 செப்டெம்பரில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு யார் குற்றவாளி என்பதைத் தெளிவாகத் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் ஜனவரி மாதமே எமக்கு ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்தது. தாக்குதல்களில் ஈடுபட்ட அனைவரையும் தண்டிக்கும் பொறுப்பை தற்போதைய அரச நிர்வாகம் ஏற்கும் - என்றார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு நீதி வேண்டி இன்று 'கறுப்பு ஞாயிறு' தினத்தை அனுஷ்டிக்கும்படி கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் ரயிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

457 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 4 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மன்னார் பொது வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

மன்னாரில் நேற்றுக் காலை ரயிலுடன் மோதுண்டு உயிரிழந்த 58 வயதுடைய ஒருவருக்கும் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அவரது சடலத்தில் அன்ரிஜென் பரிசோதனை செய்யப்பட்டபோது தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது. அதையடுத்து பி.சி.ஆர். பரிசோதனையும் செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது.

கிளிநொச்சி கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட அக்கராயன்குளத்தில் இருவருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இவர்கள் இருவரும் மல்லாவியில் இடம்பெற்ற இறுதிச் சடங்கு ஒன்றுக்குச் சென்று திரும்பிய நிலையில் சுய தனிமைப்படுத்தப்பட்டவர்கள் - என்றார்.

## கடும்போக்கு சிங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிவஞானம் சிறிதரன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் நேற்று நேரில் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்கள் எவ்வளவுதான் நசுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டாலும் தொடர்ச்சியாக தங்களது உரிமைகளுக்காக எழுந்து நிற்பார்கள் என்பதற்கு இந்த இரணைதீவு மக்களுடைய பிரயத்தனமும் வெற்றியும் சான்றாக அமைகின்றன.

இரணைதீவு பகுதியில் குடியேறிய மக்களுக்கு வாழ்வதற்குரிய அடிப்படை வசதிகள் கூட இல்லை. வசதிகளைப் பெற்றுத் தருவதற்கு தொடர்ந்தும் பல முயற்சிகளை நாங்கள் பல வழிகளிலும் முன்னெடுத்து வருகின்றோம்.

முஸ்லிம்களுடைய ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு எந்தவிதமான விஞ்ஞான ரீதியான பிரச்சினைகளும் இல்லை. உலக நாடுகளிலேயே கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக பலர் உயிரிழக்கின்றனர். இவ்வாறு உயிரிழப்பவர்களை உலகில் 188 நாடுகளில் புதைப்பதற்கான அனுமதிகள் கொடுத்திருந்தபோதும் இதனை ஓர் இனவாதச் செயலாக இலங்கை அரசு தடுத்தது.

இவ்வாறான இனவாதப் போக்கைக் கொண்டிருந்த இலங்கை அரசு ஐ.நாவில் இலங்கை மீது கொண்டுவரப்படும் பிரேரணைக்கு எதிராக இருந்த முஸ்லிம் நாடுகள் ஆதரவாக வாக்களிக்கும் அல்லது விலகி விடும் என்ற காரணத்தால் தான் ஜனாஸாவை அடக்கம் செய்யும் எண்ணத்தைத் திடீரென மாற்றிக் கொண்டது - என்றார்.

# சுற்றாடல் தொடர்பான பிரச்சினைகளை தீர்க்க உள்ளக அமைச்சு இணைப்பு வேலைத்திட்டம்!



சுற்றாடல் தொடர்பாக எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளுக்கு சில அமைச்சுக்கள் ஒன்றிணைந்து அமைச்சுக்களுக்கிடையிலான இணைப்பு வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளன.

குறித்த இணைப்பு வேலைத் திட்டத்துக்காக சுற்றாடல் அமைச்சு, வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு, நீர்வள அமைச்சு, வன ஜீவராசிகள் அமைச்சு ஆகியன இணைந்துள்ளன.

இந்த அமைச்சுக்களின் அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது முத்துராஜவெல ஈரலிப்பு நிலத்தைப் பாதுகாத்தல், அரசாங்கத்தால் பெறுப்பேற்கப்பட்டுள்ள கிராமிய காணிகளை மீண்டும் விவசாயிகளுக்கு வழங்குதல் மற்றும் சுற்றாடலுக்குத் தீங்கு ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்பவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

## மேலும் நால்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண் ஒருவர், கொழும்பு - 09 ஐச் சேர்ந்த பெண் ஒருவர், கொலன்னாவை பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதான ஆண் ஒருவர், பத்தரமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 77 வயதான பெண் ஒருவர் என நால்வர் இறுதியாக உயிரிழந்துள்ளனர்.

# பதுளை பொது வைத்தியசாலையில் கொரோனாத் தொற்றாளர் அதிகரிப்பு!

பதுளை பொது வைத்தியசாலையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 34 ஆக அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை நிர்வாகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த வைத்தியசாலையில் பணி புரியும் 2 வைத்தியர்கள், 3 சுகாதார ஊழியர்கள் மற்றும் 29 நோயாளர்களுக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 70 வயதுடைய ஒருவர், பதுளை வைத்தியசாலையில் உயிரிழந்தமையுடன், அவர் பதுளை பொது மயானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தகனம் செய்யப்பட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, பதுளை வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எனினும், ஏனைய பிரிவுகளில் வைத்திய நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெற்று வருகின்றன என நிர்வாகப்பிரிவு கூறியுள்ளது.


விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622


## நேற்று 7 ஜனாஸாக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினமும் நேற்றும் மாத்திரம் 16 ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டன என்று சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று மூலம் மரணித்த ஜனாஸாக்களில் நேற்றுமுன்தினம் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 9 ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டன. நேற்று நிட்டம்புவ பிரதேசத்தைச் சேர்ந்த 5 ஜனாஸாக்களும், நாரங்கொடயை சேர்ந்த ஒருவர் மற்றும் கொழும்பைச் சேர்ந்த ஒருவருமாக 7 ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டன.

கொரோனாத் தொற்று மூலம் மரணித்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யும் பிரதேசம் தொடர்ந்தும் இராணுவத்தினரின் பாதுகாப்பில் உள்ளதுடன், ஊடகவியலாளர்கள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஒன்லைன் மூலம் தேசிய அடையாள அட்டை விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது!

## ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவிப்பு

'தொழிநுட்ப ரீதியிலான இலங்கை' என்ற வேலைத்திட்டத்திற்கமைய ஆட்பதிவு திணைக்களத்தினால் தேசிய அடையாள அட்டை தகவல்களை தொழில்நுட்பமயப்படுத்துவதற்கான (ஒன்லைன்) விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஆட்பதிவுதிணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

அரச நிறுவனங்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள், தொலைபேசி சேவை வழங்கும் நிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள் உள்ளிட்டவற்றில் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக சேவை பெறுநர்களின் விருப்பத்தின் பேரில், தேசிய அடையாள அட்டை தகவல்களை ஒன்லைன் மயப்படுத்த இந்த விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக குடிவரவு குடியகழ்வுதிணைக்களம், இலங்கை வங்கி, நேஷன் ட்ரஸ்ட் வங்கி, கொமர்ஷல் வங்கி, டயலொக் நிறுவனம், சம்பத் வங்கி, ஸ்டேட் பேங் ஒஃப் இந்தியா, எச்.எஜ்.பி.சி. உள்ளிட்டவற்றுடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாள்களில் ஓய்வூதியத் திணைக்களம், ஹற்றன் நெஷனல் வங்கி உள்ளிட்டவற்றுடனும் ஒப்பந்தம் கைச்சாத்திட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் நபர்களின் அடையாளத்தை பிழையின்றி மிகச் சரியாக உறுதிப்படுத்திக் கொள்வதோடு, துரித சேவையையும் வழங்கக் கூடியதாக இருக்கும்.




# சர்வதேச விசாரணை கோரி யாழ். உணவு ஒறுப்பு போராட்டம் வவுனியா காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் இணைந்தனர்!




சர்வதேச விசாரணையை வலியுறுத்தி, யாழில் மேற்கொள்ளப்பட்டுவரும் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளும் நேற்று(சனிக்கிழமை) இணைந்து கொண்டனர்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் 7 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

நீதி வேண்டிய இந்த போராட்டம் நல்லூர் - நல்லை ஆதீனம் முன்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

குறித்த போராட்டத்துக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், அரசியல் பிரதிநிதிகள், சிவில் அமைப்பினர், மதத் தலைவர்கள் எனப் பலரும் தனது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதினூடாக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டன வாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித நேயத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் தமிழ் இனத்திற்கு எதிராக இன வழிப்பு என்பவற்றிக்கு சர்வதேச நீதி வேண்டும் என இங்கு பிரதானமாகக் கோரப்பட்டுள்ளது.

மேலும், தமிழ் இனத்தின் மீதான இனவழிப்பு தொடராது இருப்பதற்கு தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப் பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தப் போராட்டத்தில் நேற்று வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கலந்துகொண்டு தமது ஆதரவை வெளியிப்படுத்தியுள்ளனர்.

## கொரோனாவிலிருந்து 448 பேர் குணமடைவு!

நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 448 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதனை அடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 81 ஆயிரத்து 769 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 84 ஆயிரத்து 960 ஆகக் காணப்படுகின்றது.

இதில் 2 ஆயிரத்து 698 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை இலங்கையில் கொரோனாத் தொற்றால் இதுவரை 493 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.03.2021 இல் வெளியிடப்பெற்றது.